


பி. ஸ்ரீ.

231. கழுகுச் சிற்றப்பா

லோக பயங்கரனான சம்பராசுரனை வதஞ்செய்த போர்க்களத்திலே, அந்த லோக கைங்கரியத்திற்குத் துணையாக நின்ற ஜடாயுவிடம் தசரதர், அந்த நட்பைப் பாராட்டி உறுதி செய்து கொண்டார். அப்போது, 'நீயும் நானும் உடல் இரண்டாகவும் உயிர் ஒன்றாகவும் இருக்கிறோம்' என்று கூடச் சொல்லவில்லையாம். 'இருவருக்கும் உடலும் ஒன்று!' என்று கருதியது போலப் பேசினாராம். 'நாம் இருவரும் உயிரும் உடலும் போல் அமைந்திருக்கிறோம்' என்றாராம். அப்படியானால், 'உடல் யார்? உயிர் யார்?'—இப்படி ஒரு கேள்வி எழக்கூடுமல்லவா?

சந்தேகம் எழுவதற்கே இடமில்லாமல் சக்கிரவர்த்தி ஜடாயுவை நோக்கி, 'நீ உயிர், நான் உடம்பு!' என்று அவ்வளவு அன்புடன் பேசினாராம். அந்த நட்புக் காதல் ஜடாயுவை அப்படியே உருக்கி விட்டது. அதை நினைக்கும்போதெல்லாம் அதே உருக்கம்தான், பரவசம்தான். இப்போது நினைத்துப் பார்க்கும்போது, அந்த நினைவு, நண்பரின் மரணச் செய்தியுடன் கலந்து எவ்வளவு தூரம் உள்ளத்தைப் புண் படுத்துகிறது!

யமனுக்கு மூளைக் கோளாறு

'அப்படியானால், பாவி யமன் இந்த உயிரையல்லவா கொண்டு போயிருக்க வேண்டும்? உயிர் கிடக்க உடலைக்கொண்டு போனானே அப்பாவி! அந்த மடமைதான் என்ன?' என்று கொதிக்கிறது நண்பனுடைய நெஞ்சு.

உயிர்கிடக்க, உடலைவிசும்(பு) ஏற்றினார்,
உணர்(வு)இறந்த கூற்றினாரே!

[விசும்பு — வானுலகம். உணர்வு இறந்த — மூளை கெட்டுப்போன. கூற்றினர் — யமனர்.]

காட்டுத் தீக் கடல்

'என்ன? மூளை கெட்ட யமனர் செய்த விபரீதத்தைப் பார்த்தீர்களா?' என்று கிண்டல் செய்யும் நெஞ்சிலே சோகம் ஒரு காட்டுத் தீயைப் போல், ஒரு தீக்கடல் போல், கனன்று பொங்கிப் புகைந்து கொண்டிருக்க வேண்டு மல்லவா? இந்தச் சோகத்திற்கு உருவம் தந்திருக்கும் கவி முழுமையும் பார்க்கலாம்:

தயிர்உடைக்கும் மத்தென்ன உலகைநலி
சம்பரனைத் தடிந்(து) அந்நாள்.
அயிர்கிடக்கும் கடல்வலயத் தவர்அறிய,
'நீஉடல்,நான் ஆவி!' என்று,
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்!
செப்பினய்; திறம்பா நின்சொல்;
உயிர்கிடக்க உடலைவிசும்(பு) ஏற்றினர்,
உணர்(வு)இறந்த கூற்றி னரே!

[நலி — ஹிம்ஸிக்கின்ற. தடிந்த — கொன்ற. அயிர் — நுண்மணல். கடல்வலயம் — கடல் சூழ்ந்த வட்டம். வலயத்தவர் — பூமியிலுள்ளவர்கள். செயிர் — குற்றம். கிடத்தல் செய்யாத — கிடவாத. திரு மனத்தாய் — அழகிய (தூய) மனத்தை யுடையவனே. செப்பினய் — சொன்னய். திறம்பா நின்சொல் — உன் வார்த்தைகள் (ஒருபோதும்) தவறுவதில்லையே.]

இப் பாட்டைப் பாடப் பாடக் கவியனுபவம் சோக பாவத்தை எவ்வளவு அற்புதமாய்க் கொண்டு வந்து விடுகிறது! 'அந்த ஜடாயுவின் நட்புக் காதலில் கொந்தளித்த அந்தச் சோகத்தீயே இப்படி உருவெடுத்து வந்துவிட்டதோ?' என்று சொல்லும்படி அமைந்திருக்கிறது செய்யுள். ஒரு முறை பார்த்தால், கேட்டால், ஒரு நாளும் மறக்கமுடியாத சோகத் தீக்கடலின் அலையோசை இப் பாட்டின் கடைசி அடி.

அகத்தீ, புறத்தீ

இவ்வாறு தசரதரின் மரணத்திற்கு வருந்திப் புலம்பிய ஜடாயு, தன்னுடைய நண்பரின் மக்களைத் தழுவிக்கொண்டு, இந்தத் துயரநெருப்பில் முடிவில்லாமல் வெந்து கொண்டேயிருப்பதைக் காட்டிலும் காட்டுத்தீயில் விழுந்து ஒரே அடியாகச் சாகத்துணிந்து, அந்தத் துணிவை ராமலட்சுமணரிடம் தெரிவிக்கிறான்:

மருவினிய குணத்தவரை இருசிறகால்
உறத்தழுவி, 'மக்காள்! நீரே
உரியகடன் வினையேற்கும் உதவுவீர்;
உடல்இரண்டுக்(கு) உயிர்ஒன் றுனன்
பிரியவும்நான் பிரியாதே இனிதிருக்கும்
உடற்பொறையாம் பிழை பாரா(து),
எரியதனில் இன்றேபுக்(கு) இறவேனேல்,
இனித்துயரம் மறவேன்' என்றான்.

[மருவினிய — கலப்பதற்கு இனிய. குணத்தவரை — குணங்களையுடைய ராமலட்சுமணரை. உறத்தழுவி — நன்றாய்த் தழுவிக்கொண்டு. உரிய கடன் — (இறந்த பின்பு செய்தற்கு) உரிய ஈமக்கடன். வினையேற்கும் — தீவினையுடைய எனக்கும். உயிர் ஒன்றுனன் — தசரதன். உடல் பொறை — உடலாய சுமை. பிழை — பீடை. புக்கு — புகுந்து. இறவேனேல் — இறவாமல் போனல்.]

உயிர் உருக்கும் வேண்டுகோள்

ஜடாயு கழுகு என்பது கதை : ஆகவே இரு சிறகாலும் ராமலட்சுணரைத் தழுவிக் கொண்டான் என்கிறான் கவிஞன். தாய் தன் இரட்டைப் பிள்ளைகளை, ஒரு கைக்கு ஒரு பிள்ளையாக, இறுக அணைத்துக்கொள்வது போல் அணைத்துக் கொள்கிறானாம். அப்படிப் பொருந்த அணைத்துக் கொண்டு, 'பிள்ளைகளே ! நீங்கள் எனக்கு ஒரு காரியம் செய்யவேண்டும்' என்று வேண்டிக்கொள்கிறான். 'நண்பனைப் பிரிந்த தீவினையேன் நான். அவனுக்கு நீங்கள் செய்ததுபோல் எனக்கும் அந்தக் கடனை—ஆம், அந்த இறுதிக்கடனைச் செய்து விடுங்கள். நீங்களே செய்யவேணும்' என்று கொஞ்சுகிறான் திடீரென்று—'உயிரோடிருக்கும் அப்பனுக்கும் ஈமக் கடனா ?' என்று அவர்கள் பிரமிக்கும்படி. பிறகுதான் அக்கினிப் பிரவேசத்தைக் குறித்துப் பிரஸ்தாபிக்கிறான்.

அதிசயமான பொன்னுள்ளம்

'என்னுடல், தம் உடல் என்னும் இரண்டு உடலுக்கும் ஓர் உயிராயிருந்தவர் தசரதரே !' என்கிறான் ஜடாயு. தசரதர் ஜடாயுவையே உயிராகக் கருதியிருக்க, ஜடாயுவோ தசரதரையே உயிராகக் கருதி யிருக்கிறான். அதனால் தான் யமனார் தசரதரைக் கொண்டு போய்விட்டார் : இப்போது அவர் அவ்வளவு முட்டாள் இல்லை யென்று தோன்றுகிறது ஜடாயுவுக்கு!

'இரண்டு உடலுக்கும் பொதுவான ஒருயிர் போய்விட, ஓர் உடம்பும் ஏற்கெனவே தகனமாகி விட்டது. இந்த உடம்பும் தகனமாக வேண்டியது தானே !' என்பது ஜடாயுவின் தர்க்கவாதம். 'இனி இந்தப் பிணத்தைச் சுமக்க முடியாது ; இப்போதே அக்கினியில் தள்ளி விடுவேன். இந்தப்



பிணச்சுமையோடுதான் என் பாபச் சுமையும் தொலைய வேண்டும்!' என்று பேசும் இதயத்தைப் பாருங்கள்.

எங்களுக்குக் கதி?

இப்படிப் பேசிய ஜடாயுவை நோக்கி மக்களுக்குத் தந்தைமீதுள்ள பாசம் பெருகுகிறது ராமலட்சுமணருக்கு. 'அவர் தாம் எங்களைக் கைவிட்டார்; நீங்களும் கைவிடப் போகிறீர்களா? அப்படியானால் எங்களுக்குக் கதி யார்?' என்று கேட்கிறார்கள் :

உய்விடத்(து) உதவற்(கு)
உரியா னும்தன்
மெய்வி டக்கரு -
தாது,விண் ஏறினன்;
இவ்வி டத்தினில்
எம்பெரு மாஅன்! எமைக்
கைவி டின்,பினை
யார்களை கண்உளார்?

[உய்விடத்து — துன்பத்திலிருந்து தப்பவேண்டுமென்றால். உதவற்கு உரியானும் — உதவி செய்வதற்கு உரிய தந்தையாகிய சக்கிரவர்த்தியும். எம்பெருமாஅன் — எமது தலைவனே. பினை — பின்னை, பின்பு. களைகண் — பற்றுக் கோடு, கதி.]

சத்தியத்தைக் கைவிடமுடியாமல் தசரதர் பிள்ளைகளையும் கைவிட்டாராம். 'அவரையும் தாயையும் அயோத்தி மக்களையும் நீங்கி வனம் புகுந்த துன்பமெல்லாம் உம்மைக் கண்டதும் நீங்கி விட்டது என்றல்லவா நாங்கள் நினைக்கத் தொடங்கி விட்டோம்? அப்படியிருக்க, எளியரான எங்களை நீங்களும் கைவிடப் போகிறீர்களா?' என்றெல்லாம் ராமலட்சுமணர் சொல்ல, ஜடாயு அவர்களுடைய வார்த்தையையும் நிலையையும் ஆலோசித்துப் பார்க்கிறான்.

ஜடாயுவின் தீர்மானம்

அவர்கள் சொல்வது சரிதானே என்று தீர்மானித்து ஜடாயு,


'அன்ற தென்னின்,
அயோத்தியின், ஐயன்மீர்!
சென்ற பின்அவற்
சேர்குவென் யான்' என்றான்.

[அன்று அது என்னின் — (இப்போதே நான் இறக்கின்ற) அந்தச் செயல் (உங்களுக்குச்) சம்மதமல்ல என்றால். ஐயன்மீர் — பிள்ளைகளே. அவற்சேர்குவென் — அந்தத் தசரத சக்கிரவர்த்தியை அடைவேன்.]

தான் உயிரோடிருத்தல் தங்களுக்கு உதவியாக இருக்குமென்று அவர்கள் கருதுவதால் அவர்களை நோக்கி ஜடாயு, 'நீங்கள் திரும்பி அயோத்தியை அடையும் வரை நான் உயிர் தரித்திருப்பேன்' என்கிறான். அப்பால்தான் மரண மடைவதை 'அப்பால் நண்பனை அடைவேன்' என்று குறிப்பிடுகிறான். அவர்கள் வனத்திலே தங்கும் காலமெல்லாம் அவர்களுக்குக் காப்பாக உதவ வேண்டுமென்று ஜடாயு தீர்மானம் செய்கிறான்.

* * * *

நாட்டிலே அப்பனை இழந்த பிள்ளைகள் காட்டிலே கண்ட சிற்றப்பாவைப் பார்த்தீர்களா?



பி. ஸ்ரீ.

232. ஜடாயுவின் ஹிருதய பாஷை

தன் தோழரான தசரதருடைய முகக்குறி கண்டு ஜடாயு ராம லட்சுமணரை யாரென்று கேட்டுத் தசரத ராஜகுமாரர்கள் என்று தெரிந்து கொண்டதும், அந்தக் குதூகலத்தில் சக்கிரவர்த்தியின் க்ஷேமம் வினவித் தசரத மரணத்தையும் தெரிந்து புலம்பித் தவித்து உயிர் விடவும் சித்தமாகி விட்டான். பிறகு தன் தோழரின் புதல்வர்களுக்காக அந்த உயிர்த் தியாகத்தைக் காட்டிலும் அதிகமானதொரு தியாகத்தை உடனே செய்யத் துணிந்து, வனவாச காலமெல்லாம் பிள்ளைகளுக்கு வருமுன்காப்பாக வாழவும் இசைந்தான். இவ்வளவும் நட்புக் காதல் என்ற உணர்ச்சிப் பெருக்கினிடையே ஜடாயு மூழ்கிக் கிடக்கும்போது நடந்த காரியம்.

சத்துரு யார்?

ஆகவே இதுவரையில், 'தசரத ராஜகுமாரர்கள் நாடு துறந்து காடு புகுந்த காரணம் என்ன?' என்பதை நினைக்கவும் அவகாசம் இல்லை ஜடாயுவுக்கு. இப்போதுதான் அவர்களை நோக்கி, 'அரசன் இறந்தானென்றால் அரசு செய்ய வேண்டிய நீங்கள் ஏன் அந்தக் கடமையைக் கைவிட்டு இங்கே வந்து விட்டீர்கள்?' என்று கேட்கத் தோன்றுகிறது:

'வேந்தன் விண்அடைந்–
    தான்எனின், வீரர்நீர்
ஏந்து ஞாலம்
    இனிதளி யா(து),இவண்
போந்த தென்னை?
    புகுந்த,என் புந்திபோய்க்
காந்து கின்றது,
    கட்டுரை யீர்'என்றான்

[ஏந்து ஞாலம்– தாங்குதற்கு உரிய ராஜ்பத்தை. இனிது அளியாது– இனிமையாய் ஆட்சி செய்யாமல். இவண் – இவ்விடத்தில்; இந்தக் காட்டில். போந்தது என்னை – வந்தது என்ன காரணத்தால். புகுந்த – நடந்த

காரியத்தை. புந்தி — புத்தி. போய்க் காந்துகின்றது — மிகவும் வெதும்புகிறது. கட்டுரையீர் — உறுதியாய்ச் சொல்லுங்கள்.]

இப்படி ஜடாயு கேட்டுவிட்டு, ராம லட்சுமணர் பதில் சொல்வதற்கு முன்னமே, திடீரென்று அவர்கள் வனம் வந்த காரணத்தைக் குறித்து ஓர் ஊகமும் செய்து பார்க்கிறான்: 'யாரோ சத்துரு — பொல்லாத சத்துருவாகத்தான் இருக்கவேண்டும் — இடர் இழைத்து இவர்களை நாட்டை விட்டுத் துரத்தி யிருக்கலாமோ?' 'அப்படியானால், நான் அவர்களைத் தொலைத்து உங்களுக்கு அரசு தருவேன்' என்று உறுதி கூறுகிறான்.

சோக வெறி வீர வெறி யாகிறது

அந்தச் சத்துரு யாராக இருந்தால் தான் என்ன? அசுரராக இருந்தால் தான் என்ன? தேவராக இருந்தால் தான் என்ன?

'தேவர் தானவர்
　　திண்திறல் நாகர்வே(று)
ஏவ ராக
　　இடரிழைத் தாரெனின்,
பூஅ ராவு
　　பொலங்கறை வேலினீர்!
சாவ ராக்கித்
　　தருவென் அரசெ'ன்றான்.

[தானவர் — அசுரர். திண்திறல் நாகர் — மிக்க திறமை வாய்ந்த நாகர்கள். ஏவராக — எவராயினும். பூஅராவு — பூத்தொழில் பொலிய, அராவிக் கூர்மை செய்த. பொலம் கறை — அழகிய இரத்தக் கறை. வேலினீர் — வேலை யுடையவர்களே! சாவர் — சாவார்; செத்தவர்.]

இப்போது கொலைக் கருவியான வேலிலும் அழகு காண்கிறது ஜடாயுவின் மன நிலை. இலை வடிவமாய்ப் பூத்தொழில் பொலியச் செய்திருக்கும் வேல் கொலைத் தொழில் செய்து இரத்தக்கறை படியப் பெற்றிருப்பதும், ஒரு பயங்கர அழகாகவே காண்கிறதாம்.

இப்படிச் சோகத்தை விட்டு வீராவேசத்துடன் பேசிய ஜடாயுவுக்கு எந்தச் சத்துருவைச் சுட்டிக் காட்டப் போகிறான் ராமன்? சிறிய தாயாரா கிய கைகேயி அம்மாளையா, 'சாவராக்கி' அரசு தரப் போகிறான் இந்தக் கழுகுச் சிற்றப்பா? மேலும் ராமனுக்குச் சத்துரு ஏது? சிறிய தாயைத் தாயாகவும் மகா உபகாரியாகவும் அல்லவா கருதியிருக்கிறான்? இத்தகைய ராமன் எப்படி அந்த 'நகர் நீங்கிய படல'த்தைச் சொல்ல முடியும்?

பெண்ணா, பேயா?

ஜடாயுவுக்கு விடை கூறும்படி ராமன் லட்சுமணனை நோக்கிக் கண்ணால் ஜாடை காட்டுகிறான்:

தாதை கூறலும்,
　　தம்பியை நோக்கினான்
சீதை கேள்வன்:
　　அவனு(ம்)நன் சிற்றவை
மாத ரால்வந்த
　　செய்கை- வரம்பிலா
ஓத வேலை
　　ஒழிவின்(று) உணர்த்தினான்.

[தாதை — தந்தையாகிய ஜடாயு. கேள்வன் — கணவன். சிற்றவை மாதரால் — சிறிய தாய் என்ற அந்த ஸ்திரீயால். செய்கை — வரம்பிலா ஓத வேலை — செய்கையாகிய வரம்பில்லாத அப்பெருங்கடலை. ஒழிவின்று — சிறிதும் விட்டு விடாமல். உணர்த்தினான் — தெரியச் சொன்னான்.]

ராமன் குறிப்பை யறிந்து லட்சுமணன் நடந்த விருத்தாந்தத்தை விவரமாய்க் கூறினான். 'மாதர் குலமாகிய தாய்க் குலத்தில், வரம்பில்லாத அச்செய்கை செய்தவளும், பிறந்தாளே!' என்ற உணர்ச்சியுடன் லட்சுமணன் சொன்ன அந்தக் கதை முழுவதும் கேட்டால், யாருக்குத்தான் அந்தச் சிறிய தாய்மீது பெருங் கோபம் பொங்காமலிருக்கும்? சத்துரு யாராக இருந்தாலும்,

சாவ ராக்கித்
தருவென் அரசு!

என்று முழக்கிய ஜடாயுவுக்குக் கோபமும் ஒரு பெருங் கடலாகப் பொங்கியிருந்தால், அதிசயமில்லைதான். ஆனால் இந்தச் சிறிய தந்தைக்கு அந்தச் சிறிய தாய்மீது துளியும் கோபம் வரவில்லையாம்.



'சிறிய தாயின் சொல்லைத் தலைமேல் கொண்டு இராஜ்யம் துறந்த தியாகத்தை இந்தப் பிள்ளையிடம் காணக் கொடுத்து வைத்தோமே!' என்று குதூகலப்படுகிறது ஜடாயுவின் பொன்னுள்ளம். தந்தையின் வாக்கைக் காப்பாற்றியது எவ்வளவு முக்கியமோ, எவ்வளவு அவசியமோ, எவ்வளவு அவசரமோ, அவ்வளவு முக்கியமும் அவசியமும் அவசரமும் வாய்ந்ததாகவே சிறிய தாயின் சொல்லைத் தலைக்கொண்ட வைபவத்தையும் போற்றுகிறது ஜடாயுவின் பெரிய மனசு.

அந்த உள்ளம், உவகை துள்ள, எவ்வளவு அதிசயமாய்ப் பொங்கிவருகிறது பாருங்கள்:

'உந்தை உண்மைய
 ளாக்கி, உன் சிற்றவை
தந்த சொல்லைத்
 தலைக்கொண்டு, தாரணி
வந்த தம்பிக்(கு)
 உதவிய வள்ளலே!
எந்தை வல்ல(து)
 யாவர் வல்லார்?' எனா—

[உந்தை - உன் தந்தையாகிய தசரதர். தாரணி — ராஜ்யம். எந்தை — என் அப்பனே. எனா — என்று சொல்லி.]

'இந்தத் தியாகம் உன்னால்தான் செய்யத் தக்கது; வேறு யார் வல்லவர்?' என்று இதயத்தோடு இதயம் குலாவுகிறது, கொஞ்சுகிறது.

பிறகு ஜடாயு அந்த இதய குதூகலத்துடன் என்ன செய்தான், என்ன சொன்னான்? அந்தச் செயலையும் சொல்லையும் கொஞ்சிப் பேசுகிறது கம்பன் கவிதை, — கொஞ்சும் கிளிபோல:

அல்லித் தாமரைக்
 கண்ணனை அன்புறப்
புல்லி மோந்து,
 பொழிந்தகண் ணீரினன்,
'வல்லை மைந்த! அம்
 மன்னையும் என்னையும்
எல்லை யில்புகழ்
 எய்துவித் தாய்!' என்றான்.

[அல்லித் தாமரை — இதழ்களோடு கூடிய செந்தாமரை. அன்புற - பெருகிய அன்பினால். புல்லி — தழுவி. மோந்து — உச்சி மோந்து. வல்லை மைந்த — வல்லவனாகிய மகனே. மன் — சக்கிரவர்த்தி. எய்துவித்தாய் — அடையச் செய்தாய்.]

இந்த இரண்டு பாடல்களும் ஹிருதய பாஷை — அதிசயத் தமிழ். இப்படிப்பட்ட அன்பும் வீரமும் லட்சியமும் இல்லாத மனித வாழ்வு நாகரிக ஏணியில் எத்தனை படிகள் ஏறிவிட்டாலும், இன்ப வாழ்வாகுமா, நல் வாழ்வாகுமா, உயர்ந்த வாழ்வாகுமா?



233. ஜடாயுவின் குஞ்சுகள் !

தன் அருமைத் தோழனின் மூத்த புதல்வனைத் தியாக சிரேஷ்டனு கவும் தெரிந்து கொண்ட ஜடாயு, அந்தத் தாமரைக் கண்களிலேயே அவ்வளவு தியாக சௌந்தரியத்தையும் பார்த்து விட்டது போல் அக் கண்களை உற்று நோக்கிய வண்ணம், அன்புப் பெருக்கால் அழுது தழுவிக் கொண்டான். குழந்தையை உச்சி மோந்து ஆனந்திப்பது போல் ஆனந்தித்தான். ஆனந்தக் கண்ணீர் பொழிந்த வண்ணம், ' இத்தகைய புதல்வரல்லவா தந்தையருக்கும் அளவற்ற புகழ் தந்து உதவுகிறார்கள் ?' என்று எண்ணினான்.

கழுகுப் பெரியவர்

இப்படி எண்ணியதும், ' இந்தப் புகழ் சக்கிரவர்த்திக்கு மட்டுமா உரியது ? தோழமையால் அவருக்குச் சகோதரராகி விட்ட எனக்கும் உரியது தான் !' என்று உருகிப் போய், 'மன்னையும் என்னையும், எல்லையில் புகழ் எய்துவித்தாய் !' என்று பூரித்துப் போகிறான்.

ராமனுடைய தியாக சரிதத்தை இப்படிக் கொண்டாடிய ஜடாயுவின் பெருந்தன்மையை என்னென்பது ? 'பின்பு அப்பெரியவன் சீதையை நோக்கினான் ' என்று கூறுவதிலிருந்து, ஜடாயுவின் பெருந்தன்மையை எப்படி அனுபவித்திருக்கிறான் கவிஞன் என்பதை ஊகித்துக் கொள்ளலாம் :

பின்ன ரூர்அப்
  பெரியவன், பெய்வளை
அன்னம் அன்ன
  அணங்கினை நோக்கினான்.


[பெய்வளை — அணிந்த வளைகளையுடைய. அன்னம் அன்ன — அன்னம் போன்ற. அணங்கினை — பெண்ணை ; சீதையை.]

'அப் பெரியவன்' என்று ஜடாயுவைக் குறிப்பிடுகிறான். 'பெரியவர் யார்?' என்ற கேள்வி எழுந்தால் 'ஜடாயுவைப் போல் நடந்து கொள்ளுகிறவன்' என்ற விடை கூறிவிடலாம். 'கொடை' என்றால், 'கிருஷ்ண தேவராஜா கொடுப்பது' என்று பொருள் கூறியது ஒரு தமிழ் நிகண்டு: அவ்வளவு தூரம் அந்தக் கொடையை அனுபவித்திருக்கிறார் ஆசிரியர்; எத்தனையோ பேர் அக் கொடையை அனுபவித்ததையும் அனுபவித்திருக்கிறார். அவ்விதமாகக் கவிஞன் ஜடாயுவின் பெருமையையும் மானஸிகமாக அனுபவித்திருக்கிறான், — கதை சொல்லி வரும்போதே, கவி பாடி வரும்போதே.

'இந்த அம்மாள் யார்?

இது வரை ஜடாயு சீதையைக் கவனிக்கவில்லை. முதன் முதல் ராம லட்சுமணரைப் பார்த்ததும், அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தான். அவர்களுடைய முகஜாடையில் தசரத லட்சணம் கண்டதும், ஜடாயுவின் கவனம் அப்படியே ஊன்றி நின்றது. பிறகு தசரத மரணச் செய்தியும் அந்தச் சோகமும், 'சீதை ஒருத்தி இருக்கிறாளே' என்ற சிந்தைக்கே இடங் கொடுக்கவில்லை. சோக வேகம் தணிந்ததும், 'பின்னோகன் காட்டுக்கு





வந்து விட்டார்களே' என்ற கவலை வந்து விட்டது. அந்தத் தியாக சரிதம் கேட்ட ஆனந்தம் தான் இந்தப் பெரியவனின் புண்பட்ட உள்ளத்தைக் குணப் படுத்தி மறுபடியும் ஆரோக்கிய நிலைக்குக் கொணர்ந்திருக்கிறது —'முன்னிலும் ஆரோக்கிய நிலையில் வைத்திருக்கிறது' என்று சொல்லலாம்.

இந் நிலையில் சீதையை நோக்கிய பின் ஜடாயு ராமனை நோக்கிக் கேட்கிறான், 'இந்த அம்மாள் யார்?' என்று. இப்போது இப் பாட்டு முழுமையும் பார்க்கலாம் :

பின்ன ரும்அப்
  பெரியவன், பெய்வளை
அன்னம் அன்ன
  அணங்கினை நோக்கினன்,
'மன்னர் மன்னவன்
  மைந்த! இவ் வாணுதல்
இன்னள் என்ன
  இயம்புதி யால்' என்றான்.

[வாணுதல் – வான் நுதல், வான்–ஒளி. நுதல்–நெற்றி ; (இங்கே) நெற்றியை யுடையவள். இன்னள் – இன்னாள். இயம்புதி –சொல்வாய். ஆல் – அசை.]

இக் கேள்வியை ஜடாயு கேட்டதும், உடனே லட்சுமணன் பதில் சொல்ல விரும்புகிறான். ஆனால் 'தமையனாரின் தேவி' என்று சுருங்கச் சொல்லி விடாமல் சீதா கல்யாணக் கதையை விரிவாய்க் கூறுகிறான் ஜடாயுவுக்கு. அந்தக் கதையைத் தாடகை கதையிலிருந்து தொடங்கு கிறான். பிறகு வில்லிறுத்த வெற்றியோடு சீதா கல்யாண வைபவத்தைச் சொல்லுகிறான். ஜடாயு மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருப்பது கண்டு மேலும் அக்கதையைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போகிறான்.

கதையும் காப்பும்

ஜடாயு சாவதானமாய்க் கதை கேட்டபின் ராம லட்சுமணரை நோக்கி, 'நீங்கள் வளநாடு துறந்து வனவாசம் செய்ய வந்துவிட்டீர்கள். இனி இந்தக் காடடிலேயே தங்கியிருங்கள், இந்தச் சீதைப் பெண்ணுடன். நான் உங்களைக் காத்து வருவேன்' என்கிறான்.

அதற்கு ராமன், 'அகஸ்திய முனிவர் ஆலோசித்துப் பார்த்து எங்களைக் கோதாவரித் துறையில் ஒரு வசதியான இடத்தைக் குறிப்பிட்டு அங்கே வசிக்கும்படி சொல்லியிருக்கிறார். அந்த இடத்தில் போய்த் தங்க வேண்டும் என்பது என் கருத்து' என்று சொன்னான்.

அது கேட்ட ஜடாயு, 'அது மிகவும் நல்லது தான். புறப்படுங்கள், அந்த இடத்தை நான் காட்டுவேன்' என்று வானத்தில் பறந்தகொண்டே தன் சிறகு நிழலில் அவர்களை அழைத்துக் கொண்டு போகிறான். இக் காட்சியைப் பார்ப்போம் :

'பெரிதும் நன்(று)அப்
பெருந்துறை ; வைகி,நீர்
புரிதிர் மாதவம் ;
போதுமின் ; யான்அது
தெரிவு றுத்துவென்'
என்(று),அவர் திண்சிறை
விரியும் நிழலில்
மேவ,விண் சென்றனன்.

[பெருந்துறை — பெருமை பொருந்திய இடம். வைகி — தங்கி. புரிதிர் — செய்யுங்கள். போதுமின் — வாருங்கள். தெரிவுறுத்துவென் — தெரியச் செய்வேன் ; காண்பிப்பேன். என்று — என்று சொல்லி. அவர் — அந்தப் பிள்ளைகள். திண் சிறை — வலிய சிறகுகள். மேவ — பொருந்தும்படி ; பொருந்தி வரும்படி. விண் — வான வெளியிலே.]

அவர்களைத் தன் சிறகு நிழலில் அழைத்துக் கொண்டே போய் ஜடாயு பஞ்சவடி என்ற ஸ்தலத்தைக் காட்டுகிறான். காட்டி விட்டு ஜடாயு திரும்பிப் போனதும் அவர்கள் அந்தச் சோலையில் தங்குகிறார்கள்.

குஞ்சு மக்களும், குஞ்சு மருமகளும்

ஜடாயு ராமலட்சுமணரைத் தன் மக்களாகக் கருதுவது போல் சீதையை மருமகளாய்க் கருதுகிறானும். அப்படி அன்பு பாராட்டுகிறவனுக்கு அவர்களைப் பிரிந்து தன் இருப்பிடம் வந்ததும் கவலை அதிகரிக்கிறதாம்.

அந்தப் பக்கங்களில் ராட்சஸ சஞ்சாரம் அதிகமென்று ஜடாயுவுக்குத் தெரியுமல்லவா ? அந்த அரக்கர்களுடைய மாயங்களும் அதிசாமர்த்தியங்களும் தெரியும். ஆகவே ஜடாயு தன இருப்பிடத்தில் இருந்து கொண்டே அவர்களைத் தன் கழுகுக் கண்களால் கவனித்துப் பாதுகாத்து வருகிறானும்.

அரக்கரால் அபாயம் நேரிடாதபடி அவன் அவர்களைப் பார்த்துப் பாதுகாக்கும் அந்த அதிஜாக்கிரதையை இதோ பாருங்கள் :

சிர்ப்பைச் சிக்கற
தேறினன், சேக்கையில்
பார்ப்பைப் பார்க்கும்
பறவையிற் பார்க்கின்றான்.

[சிர்ப்பு — சிறட்பு; மாய பலம் முதலான சிறப்பியல்புகள். சிக்கற — சிறிதும சந்தேகமில்லாமல். தேறினன் — தெளிந்திருந்த ஜடாயு. சேக்கையில் — கூட்டிலுள்ள. பார்ப்பு — குஞ்சுகள். பறவையின் — பறவை போல.]

கூட்டிலுள்ள குஞ்சுகளைப் பாதுகாப்பது போல் பஞ்சவடியிலுள்ள சீதா ராம லட்சுமணரை ஜடாயு பாதுகாக்கிறானும். பொருத்தமான, பொருள் பொதிந்த உபமானம்.



234. நதி சிரிக்கிறதா, அழுகிறதா?

ராம லட்சுமணர் சீதையுடன், அந்த நிலப் பகுதிக்கு ஓர் ஆபரணமாகத் திகழ்ந்த கோதாவரியாற்றைப் பார்த்தார்கள். அந்த நதியின் இரு கரையும் திருமகள் உறைவிடமாய்த் திகழ்ந்தது. அந்நதி பல வாய்க்கால்கள் வழியாகப் பாய்ந்து நாட்டுக்குச் செழுமையூட்டி வயல்களாய்ப் பொலிந்து மக்களுக்கு உணவுப் பொருள் பலவற்றையும் விளைத்துக் கொடுத்தது.

ஜீவ நதியும் ஜீவ கவியும்

அந்நதியில் எத்தனையோ நீராடு துறைகள். அது மலையிலிருந்து காடு, நாடு, 'பாலை' என்று கருதப்படும் பாழான பிரதேசம் ஆகிய நிலங்களின் வழியாகக் கடற்கரைப் பிரதேசத்திற்கு வந்து கடலிலே சங்கமம் ஆகிறது.

ஆற்றின் தெளிவும் குளிர்ச்சியும், ஜீவ நதியாய் இடையறாது பெருகியோடும் அந்த ஓட்டமும், நீண்ட காட்டு வழிகளில் அலைந்து திரிந்துவந்த ராம லட்சுமணருக்கும் சீதைக்கும் எத்தகைய இன்பக் காட்சியாக இருந்திருக்க வேண்டும்!

அக்காட்சியை வருணிக்கும் கவிஞன், 'சான்றோர் கவி' என்று சொல்லும்படி இருக்கிறது கோதாவரி நதி என்கிறான்.

கவியெனக் கிடந்தது!

இனி இந்தப் பாட்டைப் பார்க்கலாம். சான்றோர் கவியைச் சிலேடை மூலமாகக் கோதாவரி நதிக்கு உபமானமாக்கும் செய்யுள் :

புவியினுக்(கு) அணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் ருகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறிஅ ளாவிச்
சவியுறத் தெளிந்து, தண்ணென்
ருெழுக்கமும் தழுவிச், சான்ருேர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.

[புவி — பூமி; (இங்கே) நிலப் பகுதி. ஆன்ற — சிறந்த. புலத்திற்ருகி — (1) வயல்களுக்கு உரியதாகி; (2) அறிவினுக்கு உரியதாகி. அவி அகத் துறைகள் — (1) வெப்பம் தணிக்கும் இடங்களான நீராடு துறைகள் (2) அமைந்த அகப்பொருள் துறைகள். ஐந்திணை — ஐவகை நிலங்கள். நெறி — (1) வழி; (2) ஒழுக்கங்கள். அளாவி — பொருந்தி; கலந்து. சவி— ஒளி. உற — பொருந்த. தண் என்ற ஒழுக்கமும் தழுவி — குளிர்ச்சியாய்ப் பெருகியோடும் ஓட்டத்தை யுடையதாய்.]

கோதாவரி யாறு அந்த நிலப்பகுதிக்கு அணியாக இருப்பது போல், சான்ருேர் கவியும் உலகத்திற்கு — அதாவது உலக மக்களுக்கு — ஆபரணமாக விளங்குகிறதாம். ஆம், உலக மக்களின் உள்ளத்திற்குப் பூஷணமல்லவா கவிதை ?

செல்வம் — உணவு

மலையிலிருந்தும் நிலங்களிலிருந்தும் பொன்மணல், வயிரம் முதலான பொருள்களை வாரிக் கொணர்ந்து, தேடிப் பிடிப்பார்க்கு வழங்கும் பேராறு போல், சான்ருேர் கவிதையும் நுண்ணறிவாளர்க்குச் சிறந்த பொருள்களை விஸ்தாரமாக வழங்குகிறதாம்.

கோதாவரி வாய்க்கால்களாகச் சென்று பாய்ந்து உணவுப் பொருள்களை விளைவிப்பது போல், சான்ருேர் கவி அறிவுக்கு உணவாக விளைந்து கொண்டே இருக்கிறதாம்.

துறையும் நிலமும்

தாபம் தணிக்கும் நீராடுதுறைகள் பல காணப்படுகின்றன கோதாவரி என்ற பேராற்றிலே. அப்படியே காதல் - துறைகள் பல காணப்படுகின்றனவாம் சான்ருேர் கவிதைப் பேராற்றிலும்.

மலை, காடு, நாடு, பாலை, கடற்கரை ஆகிய ஐவகை நிலங்களின் வழியே பாய்ந்து வருகிறதாம் நீண்ட பேராறு. இதைத்தான்,


ஐந்திணை நெறி அளாவி

என்கிருன் கவிஞன். இந்த ஐவகை நிலங்களில் மலை நிலத்தைக் குறிஞ்சி என்பர்; காட்டை முல்லை என்பர்; நாட்டை மருதம் என்பர்; கடற்கரையை நெய்தல் என்பர்; பாழான வனப் பிரதேசத்தைப் பாலை என்பர் இந்த நிலங்களுக்கு இசைந்தவாறு பண்டைக் கவிகள், காதலர்களின் சந்திப்பு, பிரிவு முதலிய நெறிகளை அமைத்திருக்கின்றனர். ஆகவே பழைய சான்ருேர்களின் கவியும் ' ஐந்திணை நெறி ' தழுவிச் செல்லுகிறதாம்.

ஒளி, தெளிவு, ஓட்டம்

இனி ஆற்றின் ஒளி பொருந்திய தெளிவிலும், ஜில்லென்று குளிர்ந்து செல்லும் நீரோட்டத்திலும் உவமை கிடைக்கிறது, சான்றோர் கவிதையின் ஒளிக்கும் தெளிவிற்கும் தண்மைக்கும் ஜீவ ஓட்டத்திற்கும்.

மிக்க ஆழத்தில் உள்ள நுண் பொருள்களும் நன்கு தெரியும்படியாகத் தெளிந்திருக்கிறதாம் ஆற்று நீர். அந்த வெள்ளத்திலே ஒளி



ஊடுருவிச் சென்று பொருந்தித் தரையில் ஆழத்திலே கிடக்கும் பொருள்களையும் அப்படியே தெளிவாய்க் காட்டிவிடுகிறதாம். இத்தகைய ஒளியும் தெளிவும் கவிதைக்கும் இன்றியமையாதன என்கிறான் கம்பன்.

ஜில்லென்று குளிர்ந்து பெருகியோடும் ஜீவநதி போன்றது ஜீவ கவிதையும். ஓதுவோர் நாவிலும் செவியிலும் சிந்தையிலும் ஜில்லென்று குளிர்ந்து பெருகி ஓடுமாம் உயிர்க் கவிதை.

இந்தக் கோதாவரிக் கவியில் சான்றோர் கவிதையின் லட்சணம் வருணிக்கப்படுகிறது. கவிதையின் லட்சணம் பெரும்பாலும் அழகாகவும் பொருத்தமாகவும் வருணிக்கப்பட்டிருக்கிறது. எனினும் இச் செய்யுளை ஒரு நல்ல நதிவருணனைப் பாட்டு என்றுசொல்ல முடியாது. பாட்டின் எடுப்பு அழகாயிருந்தபோதிலும், பின் இரண்டு அடிகள் அழகாய் நடந்தபோதிலும், இச்செய்யுள் பண்டித நடையைத்தான் நினைப்பூட்டுகிறது. கம்பனுடைய சிறப்பியல்பான ஜீவ ஓட்டம் இச் செய்யுளில் காணப்படவில்லை.


* * * *

சீதையும் ராமலட்சுமணரும் கோதாவரி யாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது அந்த ஆற்றில் தாமரை மலர்களையும் நீலமலர்களையும் கண்டார்களாம். மலர்ந்த தாமரைப் பூக்களைப் பார்த்தார்கள்; நிமிர்ந்து விளங்கிய நீல மலர்களையும் பார்த்தார்கள். அந்த மலர்களை அலைபட்ட வெள்ளம் இவர்கள் நின்ற கரையிலே ஒதுக்கியதாம்.

அந்தக் காட்சி எப்படி இருக்கிறது? செல்வப் பிள்ளைகளாகிய மூவரையும் முகமலர்ந்து கண்குளிர நோக்கி அந்த நதி, மலர்களை அலைக் கையால் வாரி அவர்கள் கால்களில் இட்டுப் பணிந்து வரவேற்பது போலத் தோன்றுகிறதாம்.

'என்ன மகிழ்ச்சி அந்த நதிக்குத் தான் இந்தச் செல்வர்களைக் கண்டதும்?' என்று நாம் அதிசயிக்கும் போதே, 'அந்த ஆரவாரம் சிரிப்பில்லை, அது அழுகைதான்! நன்றாக உற்றுக் கேளுங்கள்' என்கிறான் கவிஞன்.

நாமும் அவசரப்படாமல் சிறிது நேரம் உற்றுக் கேட்டுக் கொண்டிருப்போம்.



235. புன்னகையும் புது நகையும்

தலையிலே பனி விழ, ராம லட்சுமணரும் சீதா பிராட்டியும் அந்த வனத்திற்கு வந்து வசிக்க நேர்ந்த கஷ்ட தசை கல்லான நெஞ்சுகளையும் உருக்கி விடுமல்லவா? கல்லும் கனிந்துருகும்போது, திரவ ரூபமான ஆறு அந்தத் தியாகம் பார்த்துத் துயரம் பார்த்துத் தொழுது உருகிக் கண்ணீர் வடிப்பதும் வியப்பாமோ?— கதறி யழுவதும் வியப்பாமோ? இந்த மனோ பாவத்துடன் இப்போது கோதாவரியைப் பார்க்கும் கவிஞன், அந்த ஆற்றுத் தண்ணீரை—அந்தப் பனிக்கால வெள்ளத்தைச் சீதா ராம லட்சுமணரைக் கண்டதும் பெருகிவரும் கண்ணீராய்க் காண்கிறான்.

காதலும் அனுதாபமும்

அதிகமாய்த் துயரப்படும் ஓர் அழகியை அதிக அன்பினால் நோக்குகிறவர், 'அம்மா! நீ அழுத கண்ணீர் ஆறாய்ப் பெருகி விட்டதே!' என்று 'உயர்வு நவிற்சி' யாகப் பேசி உள்ளத்திலுள்ள அனுதாபத்தை வெளியிடுவதுண்டல்லவா? அத்தகைய அனுதாப மனோபாவத்துடன், அன்பு மிகுந்த கோதாவரி அழகு மிகுந்த சீதா ராமலட்சுமணரை நோக்குகிறதாம்:

— எழுவுறு காதலால், இங்(கு)
இரைத்(து) இரைத்(து) ஏங்கிஏங்கிப்,
பழுவநாள் குவளைச் செவ்விக்
கண்பனி பரந்து சோர,
வழுவிலா வாய்மை மைந்தர்
வனத்(து)உறை வருத்தம் நோக்கி,
அழுவதும் ஒத்த தால்,அவ்
அலங்குநீர் ஆறு மன்னோ!

[எழுவுறு — மேன்மேலும் எழுகின்ற. இரைத்து இரைத்து — கதறிக் கதறி. பழுவநாள் குவளை — தொகுதியாக அன்றைய தினம் மலர்ந்திருக்கும் நீலமலர்களாகிய. செவ்விக் கண் — அழகிய கண்களிலிருந்து பெருகுவது போல். பனி பரந்து சோர — பனிநீர் பரந்து பெருகிவர. வழுவிலா வாய்மை — தவறாத சத்தியம். வனத்து உறை — காட்டிலே வந்து வசிக்கிற. அலங்கு நீர் — அசைந்துவருவது போலத் தோன்றும் நீர்.]

அன்று மலர்ந்த நீலமலர்களை அப்படியே அடித்துக்கொண்டு வருகிறதாம் கோதாவரி யாறு அப்போது. நதியன்னையின் அந்த நீலமலர்க் கண்களிலிருந்து கண்ணீர் பனிநீர்போல் விழுந்து இப்படி வெள்ளமிடுகிறதோ?—என்று தோன்றுகிறதாம்.

மேலும் அந்நதி இரைந்து கொண்டும், சிறிய ஓசைகளைச் செய்து கொண்டும் வருவது, கதறிக் கதறியும் ஏங்கி ஏங்கியும் அழுவது போலத் தோன்றுகிறதாம். அயோத்தியின் செல்வக் குமாரும் மிதிலைச் செல்வக்குமரியும் கோதாவரியாற்றை அடைந்த போது பனிக்காலம் ஆரம்பமாகி விட்டது என்பது குறிப்பு.

மீண்டும் இளமை (உல்லாசயாத்திரை)

சீதையோ, இப்படித் தொழுகையும் அழுகையுமாக வந்து கொண்டிருக்கிற கோதாவரியின் வளங்களையும் வனப்புகளையும் காண விருப்புகிறாள். தன் அன்பனுடன் அக்காட்சிகளை அனுபவிக்க வேண்டும் என்பது அவளுடைய இதய ஆசை. குறிப்பறிதலில் வல்லவர்களான ராம லட்சுமணர் இருவரும் சீதையின் அகக் கருத்தை முகக் குறிப்பால் உணர்ந்து கொள்கிறார்கள். உணர்ந்து கொண்டதும், லட்சுமணன் பின் தங்கி நிற்கிறான்; சீதாராமர் இருவரும் ஆற்றங்கரையில் உலாவுகிறார்கள்.

செஞ்சொற் கவிபோல் பொங்கிப் பரந்து தெளிந்து விரிந்து பெருகி வரும் அந்த ஆற்றையும், அது அடித்துக் கொண்டு வந்த மலர்களையும், அதன் ஆரவாரங்களையும் பார்த்துக் கொண்டே வந்தவர்கள், அந்த இயற்கை யழகுகளில் ஈடுபட்டு, 'வனவாசம் செய்கிறோமே' என்பதையும் மறந்து விடுகிறார்கள். கால வெள்ளம் பின்னோக்கி ஓட, அவர்கள் ஒருவரை யொருவர் மிதிலையில் கண்டு காதலித்த அந்த இளங் காதலர்களாகி விடுகிறார்கள். காதலர் இருவரும் உல்லாச யாத்திரையாக வந்திருப்பது போலவே இப்போது தோன்றுகிறது.

அன்னமும் சீதையும்

கரை யோரமாகப் போகிறார்கள். அப்போது அவ்வழியாக அன்னம் ஒன்று வரக் காண்கிறார்கள். அது இவர்களைக் கண்டதும் ஒதுங்கிப் போகிறது. மனிதரைக் கண்டதும் பறவை ஒதுங்கிப் போவது இயல்பு தானே? எனினும் இந்தச் சாதாரண நிகழ்ச்சியில் காதலன் ஒரு விசேஷமான பொருள் காண்கிறான். "நானும் சீதையும் உல்லாசமாகச் சஞ்சரிக்கும்போது அந்த அன்னப் பறவை — உல்லாச நடைக்குப் பேர்போன அன்னப் பறவை — வெட்கமடைந்தது போல் ஒதுங்கி நடப்பானேன்?" என்று கருதி, அருகே நடந்து வரும் சீதையின் நடையை உற்று நோக்குகிறான் ராமன். உற்று நோக்கியதும் ஒரு புன்சிரிப்பு — 'சிறியதோர் முறுவல்'—வந்து விடுகிறதாம் ராமனுக்கு.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன், உழைய னாகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியநோர் முறுவல் செய்தான்.

[ஓதிமம்–அன்னம். உத்தமன்–புருஷோத்தமனான ராமன். உழையன் ஆகும்–அருகில் உள்ளவனான.]

இந்தச் சிறிய முறுவலின் பெரும் பொருளைக் கவிஞன் உய்த்துணர வைக்கிறான். சீதையின் நடைக்குத் தோற்று அன்னம் ஒதுங்கிப் போனதாகக் கருதி அந்தத் தோல்விக்கு இகழ்ச்சியும், சீதையின் நடையழகிற்கு மகிழ்ச்சியும் தோன்றச் சிறுநகை புரிகிறானாம் ராமன்.

யானையும் ராமனும்

இப்படி ராமனுக்குப் புன் சிரிப்பு வந்தது போல், சீதைக்கும் புன்னகை வருகிறதாம். ராமனது புன்னகைக்கு, ஒதுங்கிப் போன அன்னம் காரணமென்றால், சீதையின் புன்னகைக்கு ஆற்றில் தண்ணீர் குடித்துத் திரும்பிப் போகும் யானை காரணமாகி விடுகிறதாம்.



மாதவள் தானும் ஆண்டு
வந்து,நீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.

[மாது அவள் – அந்தச் சீதைப் பெண்ணும். ஆண்டு – அவ்விடத்தில். போதகம் – ஆண் யானை. நடப்ப – நடக்க. புதியதோர் முறுவல் – புதுமை வாய்ந்த புன்சிரிப்பு.]


நீர் பருக வந்த யானை நீர் பருகியதும் இயல்பாகத் திரும்பிப் போகிறது. ஆனால் 'ராமனது கம்பீரமான நடைக்குத் தோற்றுத்தான் அந்த யானை அப்படிப் போகிறது!' என்று இகழ்ச்சியும் மகிழ்ச்சியும் தோன்றப் புன்னகை புரிகிறாளாம் சீதை. அந்த நாளில் யானைப் போர் போராட்டத்தின் ஒரு முக்கியமான பகுதி. யானை புறங்காட்டிப் போவது போரின் வெற்றிக்கே காரணமாகி விடும். போரில் தோற்றவர் புறங்காட்டிப் போவதுபோல் யானை போகிறதாம். அது அப்படிப் போகும் போக்கை நோக்குகிறாள் சீதை. 'மீளும் போதகம் நடப்ப நோக்கி' என்று கவிஞன் கூறுவது கவனிக்கத் தக்கது. ராமனுடைய சாதாரண நடையில் அவ்வளவு வெற்றிப் பெருமிதம் கண்டு கர்வம் கொள்கிறது சீதை நெஞ்சு.

இருவகைப் புன்சிரிப்பு

ராமன் முகத்தில் தோன்றிய புன்னகையைச் 'சிறிய முறுவல்' என்று கூறும் கவிஞன், சீதை முகத்தில் திகழும் புன்சிரிப்பைப் 'புதிய முறுவல்' என்று சிறப்பித்துக் காட்டுகிறான்.

ராமனுள்ளம் ஆழமான கருங்கடல் போல் சிந்தனை நிரம்பியது' அகத்தின் ஆழத்திற்கு எற்றபடி அவன் மலர்ந்த முகம் எப்போதும் அமைதியாக விளங்குகிறது. இப்போது சீதையின் நடையழகைப் பாராட்டும் காதல் தென்றல் போல் வீச, ஒரு சிற்றலை போல் எழுந்து மறைகிறது சிறிய முறுவல், ராமன் திருமுகத்திலே. மீண்டும் அமைதிதான், ஆழ்ந்த சிந்தனை தான்.

சீதைக்கோ இப்போது ஒரு புதிய இன்ப வாழ்வே பிறந்து விட்டது போலத் தோன்றுகிறது. ராமனுடன் இருக்கும்போது நாடென்றும் காடென்றும் வேற்றுமையே தெரிவதில்லை அவளுக்கு. பனிக்கும் வெயிலுக்கும் தான் வேற்றுமை தெரிகிறதா, என்ன? ராமனைப் பற்றிய சிந்தனை தவிர வேறு சிந்தனைக்கு இடமே கிடையாது இந்த உள்ளத்திலே. சீதையின் முகத்திலே பூத்த புதிய புன்னகை சீதைக்குக் கிடைத்த வாடாத ஒரு மலர் போல், சீதையை இப்போது அணி செய்திருக்கும் ஒரு பொன்னகை போல் ஆகிவிடுகிறதாம்.



236. இன்பச் சித்திரம் — ஒரு துன்ப நோய்

இயற்கையின் அழகுக் காட்சிகளில் அந்த அழகுகளோடு தங்கள் இஷ்ட மூர்த்தியின் அழகுகளையும் காண்கிறார்கள் பக்தர்களும் காதலர்களும். அன்பின் பெருக்கில், ஆர்வத்தின் முதிர்ச்சியில் ஏற்படும் இன்ப மயக்கம் இது.

அழகுக் காதல்

கோதாவரி ஆற்றங்கரையில் உல்லாஸமாக உலாவித் திரியும்போது சீதையும் ராமனும் அந்த ஆற்று வெள்ளத்தைக் கண் குளிர நோக்கிய பின், அழுகையும் தொழுகையுமாய் ஆறு தெரிவித்த அனுதாபத்தைக் கண்டு ஆறுதல் அடைந்த பின், நதியின் அருகிலுள்ள மணற் குன்றுகளையும், அன்னம் முதலான பறவைகளையும் பார்த்துக் களிப்புறுகிறார்கள்.

ஆற்றிலே தண்ணீர் குடித்துத் திரும்பிப் போகும் யானையின் கம்பீர அழகைக் கண்ணுற்றபின், நீர்க்கொடிகள் ஆற்றோரத்தில் காற்றிலே அசைந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறார்கள். ஆற்றோரத்தில் மடுவாகத் தண்ணீர் தங்கியிருந்த ஓரிடத்தை ஒட்டிக் கருநீலமலர்கள் காடு காடாய் மலர்ந்திருந்ததையும், அக்காட்டின் இடையிடையே செந்தாமரைப் பூக்கள் பூத்திருப்பதையும் பார்க்கிறார்கள்.

வசிய சித்திரங்கள்

ஆனால் தளதள வென்றிருக்கும் அந்த நீர்க் கொடிகளையே ராமன் விசேஷமாய்க் கவனிப்பானேன்? ஏனோ சீதை அந்தக் கருநீலமலர்களையும் செந்தாமரைப் பூக்களையும் அப்படி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறான், ஏதோ ஒரு மனோ வசிய சக்தியால் கட்டுண்டவன் போல?

ஆம், அது ஒரு மனோவசிய சக்திதான். தூய காதலில் அழகு தூண்டப் பிறந்த மனோவசிய சக்தி.



வில்இயல் தடக்கை
வீரன்,
வீங்குநீ ராற்றின்
பாங்கர்,
வல்லிகள் நுடங்கக்
கண்டான்,
மங்கைதன் மருங்
குல் நோக்க,
எல்லியங் குவளைக்
கானத்(து)
இடையிடை
மலர்ந்து நின்ற
அல்லியங் கமலம்
கண்டாள்,
அண்ணல்தன்
வடிவு கண்டாள்.

[வில் இயல் தடக்கை — வில் பொருந்திய பெரிய கை. வீங்கு நீர் — மிக்கநீர். பாங்கர் — இடத்திலே. வல்லிகள் — கொடிகள். நுடங்க — அசைய. கண்டான் — கண்டவனாய். மருங்குல் நோக்க — (அக்கொடிகளிலே சீதையின் துவளுகிற) இடையை நோக்க. எல்லி அம் குவளைக் கானத்து — இருள் போலக் கருநீலமாயிருக்கும் அழகிய நீலோர்பல மலர்த் தொகுதிகளின். அல்லி-அகஇதழ். அம் கமலம் — அழகிய தாமரை. அண்ணல் — ராமன்.]



காற்றில் அசையும் பூங்கொடிகளில் ராமன் பெண் கொடியாகிய சீதையைக் காண்பதும், கருநீலக் குவளைகளின் இடையிடையே செந்தாமரை பூத்துநின்ற காட்சியில் சீதை ராமனது நீலமேனியையும் செந்தாமரைக் கண்களையும் காண்பதும், காதலர்கள் காதலின் மனோவசிய சக்தியால் கண்டுகளிக்கும் இன்பச் சித்திரங்கள்.

லட்சுமணக் கொத்தன்

இப்படி யெல்லாம் ராமனும் சீதையும் கோதாவரி ஆற்றங்கரையிலே மீண்டும் இளங்காதலர்களாகிக் காதற் கனவுகளில் முழுகியிருக்கும்போது, லட்சுமணன் ஒரு சாதாரணக் கொத்தனைப் போல், பாணசாலை கட்டிக் கொண்டிருக்கிறான், 'பஞ்சவடி' என்ற காட்டுப் பக்கத்தில், ஏகாந்தமான ஓரிடத்திலே. கொத்தனிலும் வேலைப் பழக்கமில்லாத கொத்தன், சித்திர கூட மலையில் பர்ணசாலை கட்டிமுடித்த அனுபவமும், சீதாராமர்மீதுள்ள அபாரமான காதலும் ஆசிரியராகக் கற்பித்த வித்தையால் லட்சுமணக் கொத்தன் எப்படியோ கட்டி முடித்து விடுகிறான் இந்தப் பர்ணசாலையை, முன்னிலும் இனிமையாகவும் அழகாகவும்.

வேலைக்குக் கூலி

இந்தக் கொத்துவேலை — ஊதியம் இல்லாத கொத்துவேலை — வேலைப் பழக்கம் இல்லாதவனால் எவ்வளவு அழகாய்ச் செய்து முடிக்கப் பெற்றிருக்கிறது! அழகோடு இனிமையும் பூவின் பொலிவும் கொஞ்சுகின்றனவாம் தம்பி வில்லிழுத்த கையால் கட்டி முடித்த பர்ணசாலையிலே. இந்த வேலை லட்சுமணனுக்கும் எவ்வளவோ இனிமையாகத்தான் இருந்திருக்க வேண்டும்!

தம்பிக்குத் தமையன் மீதுள்ள காதல், சீதைக்கு ராமன் மீதுள்ள காதல் போன்றது தான்; அதற்கு இது குறைந்ததில்லையே! சீதைக்கும் ராமனுக்கும் ஆற்றங்கரையில் உல்லாசக் காட்சிகள் எவ்வளவு இனிமையாகவும் அழகாகவும் இருந்தனவோ, அப்படி இருந்திருக்க வேண்டும் லட்சுமணனுக்குப் பஞ்சவடியில் பர்ணசாலை கட்டிய பணியும்! இந்தக் கொத்துவேலைக்கு இதற்கு மேல் கூலியும் வேண்டுமோ?

லட்சுமணன் தயாரிப்பு

ராமனும் சீதையும் கோதாவரி அருவியாகக் குதித்துப் பெருகிவரும் அழகைப் பார்த்து விட்டு, அருகேயுள்ள பஞ்சவடிக்கு வந்தார்கள். ஐந்து ராட்சஸ ஆலமரங்கள் கிளைகளும் விழுதுகளுமாய் ஒரு தனிக்காடாகப் பரந்து கிடக்கும் பஞ்சவடியை ஒட்டி வளமான அந்த இடத்தில் ஓர் இயற்கைப் பூஞ்சோலை வளர்ந்திருந்தது. ஆற்றங்கரை மணல் மேடுகளும் மலை மேடுகளும் பள்ளத்தாக்குகளும் அருவிகளுமாய் இருந்த காட்டுப் பிரதேசத்தில் பஞ்சவடி குளிர்ச்சியாகவும் வசதியாகவும் இயற்கைப் பேரழகு வாய்ந்ததாகவும் இருந்தது. இங்கே அதிவசதியான இடத்தில் லட்சுமணன் பர்ணசாலை கட்டித் தயாராக வைத்திருக்கிறான்.

கிரகப் பிரவேசம்

ராமனும் சீதையும் இயற்கை வளங்களையும், வனப்புகளையும் அனுபவித்துத் திரும்பியதும், தம்பி செய்த பர்ணசாலை இனிமையாகவும் அழ

காகவும் தங்களை வரவேற்று நிற்பதைக் கண்டார்கள். அந்தப் பணிக்காக நன்றி தான் தெரிவிக்க முடியுமா அக்காதல்—தம்பிக்கு? ராமனும் அதற்குத் துணிய வில்லை.

உடனே கிரகப் பிரவேசம் நடக்கிறது. மந்திரமில்லை, புரோகிதர் இல்லை; நாளில்லை, நட்சத்திரமில்லை.

அனையதோர் தன்மை யால்,அவ்
  அருவிநீர் ஆற்றின் பாங்கர்ப்,
பனிதரு படிவப் பஞ்ச
  வடியெனும் பருவச் சோலைத்
தனியிடம் அதனை நண்ணித்,
  தம்பியால் சமைக்கப் பட்ட
இனியபூஞ் சாலை எய்தி
  இருந்தனன் இராமன்; இப்பால்.

[அனையதோர் — அப்படிப்பட்டதொரு. பாங்கர் — அருகிலுள்ள. படிவம் — தன்மை. பருவச்சோலை — இந்தப் பருவகாலத்திலே மலர்ச்சி பெற்றிருந்த சோலை. நண்ணி — சேர்ந்து. சமைக்கப்பட்ட — செய்யப்பட்ட. பூஞ்சாலை — அழகிய பர்ணசாலை. எய்தி — அடைந்து. இப்பால் — இதன் பின்பு.]

பூஞ்சோலைக்கு இடையே பூஞ்சாலையாக அமைந்த பர்ணசாலையில் குடியேறிய பின்பு சீதை வீட்டுக் காரியங்களைப் பார்க்கத் தொடங்கினாள். 'நாடோடிகள்' என்று சொல்லும் உரிமைகூடப் பெறாதவர்களாய்க் 'காடோடிகள்' என்று சொல்லத்தக்க நிலையில்லாத நிலையில் அலைந்து வந்தவர்களுக்கு, இப்போது நிலையானதோர் இல்லம் கிடைத்து விட்டதல்லவா? 'இல்லாள்' என்ற பெருமையின் பொருளும் பொறுப்பும் எவ்வளவு அழகாய்ப் புரிந்துவிடுகின்றன சீதைக்கு இப்போது! இல்லாளுக்கு இல்லம் கிடைத்துவிட்டால், இல்லத்தையும் இல் வாழ்க்கையையும் மேன்மேலும் ஒளியும் அழகும் இனிமையும் வாய்ந்ததாகச் செய்துகொண்டிருக்க வேண்டியது தானே? அரண்மனை வாசத்தைக் காட்டிலும் இந்தப் பர்ணசாலைவாசம் எவ்வளவு ஆரோக்கியமாகவும் இனிமையாகவும் தோன்றுகிறது!

ஒரு நாள் சீதை பர்ணசாலைக்குள் இருக்கிறாள். லட்சுமணன் வெளியே போயிருக்கிறான். ராமன் பர்ணசாலைக்குச் சிறிது தூரத்தில் நின்று அந்தக் காட்டுப் புறத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். 'இழந்த ராஜ்யத்தைக் காட்டிலும் கிடைத்திருக்கும் இந்த ராஜ்யம் பெரிது; இதுவே மகாராஜ்யம்! குறுகிய நோக்கங்களும் பேராசைகளும், பொறாமையும் பூசலும் இல்லாத ஆரோக்யமான வாழ்க்கை!' என்பன போன்ற எண்ணங்கள் ராமனுள்ளத்தில் ஓடிக்கொண்டிருக்கக் கூடும், அமைதியான பெருங்கடலின் ஆழத்திலே ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டங்கள் போல

எனினும் இந்த வாழ்க்கையின் ஆரோக்கியத்தையும் கெடுக்க ஒரு நோய் - கொடிய நோய் - தோன்றப் போகிறது. கைகேயி மூலமாகக் காட்டுக்குத் துரத்திய விதி, காட்டிலும் நாசம் விளைக்கப் பார்க்கிறதா? ஆனால் இந்த நல்லவர்களுக்கில்லை அந்த நாசம். வேறு யாருக்கு? பொறுத்துப் பார்ப்போம்.



ஒரு முக்கிய கதாபாத்திரம் சூர்ப்பணகை. இவள் கதையே ஒரு குட்டி இதிகாசம் என்று சொல்லும்படி நகைச்சுவையுடன் அமைந்திருக்கிறது.

பி.ஸ்ரீ

அரக்கியின் காதல்

237. என்ன சக்தி! என்ன கொடுமை!

பெண்ணை 'அபலை' (பலமில்லாதவள்) என்கிறோம். சாதாரணமாக வெள்ளைக்காரரும் பெண்மையில் பலவீனத்தையும் அழகையும் சாதாரணமாய்க் காண்கிறார்கள். ஆனால் பெண்மையில் சக்தி இல்லையா? பெண்மையைச் சக்தி என்றே இந்து சமயம் கூறுவதுண்டு. ஆக்கும் சக்தியும், அளிக்கும் சக்தியும் தாய்மையின் சக்தி தானே? பெண்மை ஸாராம்சத்தில் தாய்மைதானே? நல்வழியில், அன்பு வழியில், அறவழியில் ஆக்கும் சக்தியாக விளங்கும் பெண்மை, அல்வழியில் அழிக்கும் சக்தியாகிறது. அன்பு பகையாகிறது; அழகு அழிவாகிறது. பெண்மையின் ஆக்கம் மக்களைத் தெய்வஜாதியாகப் படைத்து விடும்; அழிவுச் சக்தியோ பேயாகி ராட்சஸ சக்தியாகி ஸர்வநாசம் செய்ய முயலும்.

நோயும் பேயும்

ராவணன் தங்கையான சூர்ப்பணகை கணவனை இழந்தபின் தண்டகாரணியத்தில் ஜனஸ்தானம் என்ற பகுதியில் குடியேறி வனவாசிகளை ஹிம்ஸிப்பதும் யதேச்சையாகத் திரிவதுமா யிருந்தாள். பெண்மையின் சக்தி சூர்ப்பணகையிடம் அழிவுப் பெருஞ் சக்தியாகப் பரிணமித்து விட்டது. 'சாதுக்களை வம்சநாசம் செய்து வந்தது மட்டுமல்ல, தான் பிறந்த ராட்சஸ குலத்தையும் மூலநாசம்பெற முடித்துவிடப் போகிறாளே!— இந்தப் பெண்மையின் பெருமை தான் என்ன? பெண் தெய்வமும் பேய்த் தெய்வமாகி விட்டதே! எவ்வளவு பெரிய ஆக்க வேலையைச் செய்திருக்கக்கூடிய சக்தி இப்படி கோரமாகப் போய் விட்டது!' என்ற பிரமிப்புடன் கம்பன் சூர்ப்பணகையை நோக்குகிறான்.

ராவண கும்பகர்ணர்களுக்குத் தங்கை, விபீஷணனுக்குத் தமக்கை; பிரம்மகுலம்—சாதாரணமான பிராம்மண குலமில்லை. ஸாக்ஷாத் பிரம்ம

தேவனுக்கே கொள்ளுப் பேத்தி, புலஸ்திய முனிவருக்குப் பேத்தி! இவள் நாசப் பெருஞ் சக்தியை வளர்த்து வளர்த்து அந்தப் பயங்கர பூதத்திற்கு ராவண குலத்தையே இரையாக்கி விட்டாள். இந்த விபரீதத்தைக் கவிஞனுடன் நாமும் கண்டு பிரமிக்கிறோம்:

நீலமா மணிநிற
நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற
முடிக்கும் மொய்ம்பினள்;
மேலைநாள் உயிரொடும்
பிறந்து, தான்வினை
காலம்ஓர்ந்(து), உடன்உறை
கடிய நோயனாள்.

[நீல மாமணி நிறம் — நீல ரத்தினத்தின் பெருஞ்சொலிப்புடன் கூடிய கறுப்பு நிறம். நிருதர் — அரக்கர். மூல நாசம் — வேரோடு நாசம். மொய்ம்பு — வலிமை. மேலை நாள் — முன்னாளில்; (இங்கே) பிறந்த பொழுதே. வினை காலம் — வினைந்து பயன் விளைக்கும் காலம். ஓர்ந்து — எதிர்பார்த்து. உடன் உறை — அந்த உயிரோடு கூடவே வசிக்கிற. கடிய — கொடிய. அனாள் — ஒத்தவள்.]

ஒரு தடவை கேட்டதும் மறக்க முடியாத சப்த ஜால வித்தையால் கம்ப நாடகமேடையில் நம் கண்முன் வந்து விடுகிறாள், மகா சாகஸ ஜாலக்காரியான சூர்ப்பணகை. நீலரத்தினக் கருமையும், அந்த அட்டக் கருமையில் பெருமையும் பெருமிதமும் ஒளியும் அழகும் வாய்ந்த ராட்சஸ சக்கரவர்த்தியான ராவணேசுவரனையும், அவனை மூலநாசம் பெற முடிக்கும் சக்தி வடிவமான சகோதரியையும் அப்படியே கொண்டு வந்து காட்டுகிறது இக் கவிதை.

இப்படியும் ஒரு நாசமா? உடன் பிறந்தவனையும் மூல நாசம் செய்வது இயற்கையா? இதற்கு விடையாக அமைந்திருக்கிறது செய்யுளின் பிற்பகுதி. பிறக்கும்போதே உடன் பிறக்கும் குஷ்டம் முதலான கொடிய நோய்கள் இல்லையா? அந்த நோய்க் கிருமிகள் நீண்டகாலம் வெளிப்படாமல் உடன் இருந்துகொண்டே ஜீவரத்தத்தால் ஊட்டம் பெற்று விளைந்து கொண்டிருக்கின்றனவாம். காலம் பார்த்துத் தம்மை ஊட்டி வளர்த்த உயிரையே உண்டு விடுகின்றனவாம். அப்படி உடன்பிறந்தே கொல்லும் நோய் ராவணனுக்கு இந்தத் தங்கையும்!—என்று அறிமுகப் படுத்துகிறான் கவிஞன்.



தமிழ் ஷேக்ஸ்பியர்

ராவணனைக் குடியோடு, அடியோடு தொலைக்கப் பிறந்த சூர்ப்பணகையின் முதலாவது பிரஸ்தாபம் எவ்வளவு பொருத்தமாகவும் வசீகரமாகவும்

இதிகாசப் பெரு நினைவுகளை அடியோடு கிளறிக் கொண்டு வரும்படியாகவும் அமைந்து விட்டது, பாருங்கள்!

ஸ்காட்ஸ் என்ற நாவல் ஆசிரியன் உச்சந் தலையில் வீற்றிருக்கும் தொப்பி தொடங்கிச் சொக்காய்க்கு வந்து உள்ளங்காலை ஒளித்திருக்கும் சோடு வரையில் வருணித்துத் தீர்த்து விடுவான் என்றும், எனினும் மேற்சொக்காயைக் கடந்து ஹிருதயத்தைத் தொடும் வித்தை அவனுக்குத் தெரியாதென்றும் ஓர் ஆங்கிலப் பேரறிஞர் சொல்லுகிறார். ஷேக்ஸ்பியர் என்ற நாடக மகா கவியோ ஹிருதயத்தையே முதல் முதல் காட்டிக் கதாபாத்திரங்களை நாடக மேடையில் நடமாட விடுவார் என்றும் அதே பேரறிஞர் கூறியுள்ளார். கம்பனும் ஷேக்ஸ்பியரின் நாடகப் பெருந் திறனுடன் சூர்ப்பணகையைத் தன் காவிய அரங்கில் தோற்றுவிக்கிறான்.

தீண்டியதை யெல்லாம் மூலநாசம் செய்யும் சக்தி வாய்ந்த அந்தக் கொடிய நோயான ஹிருதயத்தைக் காட்டியபின், கரும் பாம்பு போலக் கறுத்த உடலையும் செம்புழுதி போலச் சிவந்திருக்கும் அந்தச் செம்பட்ட மயிரையும் சுட்டிக் காட்டுகிறான்:

செம்பரா கம்படச்
 செறிந்த கூந்தலாள்,
வெம்பரா குத்தனி
 விளைந்த மெய்யினாள்!

[செம்பராகம் பட— சிவந்த புழுதியின் நிறம் தோன்ற. செறிந்த—



அடர்ந்த. வெம்ப ராகு — ராகு வெம்ப; ராகு என்ற கொடிய கரும் பாம்பும், நானும் இவளுக்கு ஒப்பில்லையே!' என்று வெம்பி வாடிப் போகும்படி. தனி விளைந்த — ஒப்பில்லாமல் விளைந்திருக்கும். மெய்யினள் — உடம்பை யுடையவள்.]

காரணம்?

இப்பேர்ப்பட்ட சூர்ப்பணகை தன்னுடைய உல்லாஸ வாசஸ்தலமாகிய காட்டில் தனியே சுற்றித் திரிந்து முனி ஜனங்களுக்கு இடையூறும் ஹிம்ஸையும் விளைக்கும் பணியில் ஈடுபட்டுப் பொழுது போக்கி வரும் போது, பஞ்சவடியில் ராமன் முதலானவர்கள் தங்கி யிருந்த ஆசிரமத்திற்கு அருகே வந்து ராமனையே பார்த்து விடுகிறாள் :

வெய்யதோர் காரணம்
உண்மை மேவினாள்,
வைகலும் தமியள்அவ்
வனத்து வைகுவாள்,
நொய்தின்இவ் உலகெலாம்
நுழையும் நோன்மையாள்
எய்தினள் இராகவன்
இருந்த சூழல்வாய்.

[வெய்யது ஓர் காரணம் உண்மை மேவினள் — கொடியதொரு காரணம் உள்ளதைப் பொருந்தியவளாய்; கொடியதொரு காரணம் பற்றி. வைகலும் — நாள்தோறும். தமியள் — தனியளாய். வைகுவாள் — வசிக்கிறவள். நொய்தின் — விரைவாக. நோன்மையாள் — வலிமை யுடையவளான சூர்ப்பணகை. எய்தினள் — வந்து சேர்ந்தாள். சூழல் வாய் — ஆசிரமத்தினிடம்.

சூர்ப்பணகையின் கணவனை அண்ணனான ராவணனே ஸம்ஹாரம் செய்து விட்டானாம் தன் திக்விஜயகாலத்திலே. அதனால் அருமைத் தங்கை விதவையாவதற்கு அண்ணனே காரணமாகி விட்டான். இவள் அந் நாளில் அண்ணன் காலில் விழுந்து பலவாறு புலம்பினாள், கதறினாள்; பெருங் கோபத்துடன் வெகுவாக இகழ்ந்து பேசினாள். அவன் மிகவும் சிரமப்பட்டுச் சமாதானப்படுத்தி இவளுக்கென்றே தண்டகாரணியத்தில் ஜனஸ்தானம் என்ற இராஜ்யத்தை உண்டாக்கி, இஷ்டப்படி யெல்லாம் திரியவும் முனி ஜனங்களை ஹிம்ஸிக்கவும் உரிமை கொடுத்தான்! அந் தகைய 'தன்னரசு'க்குக் கரன் முதலிய அரக்கர்களையும் படைத்துணையாக விட்டு வைத்து இவள் இட்ட கட்டளைப்படி நடக்கும்படி நியமித்திருந்தான். இந்த வரலாறு முழுவதையும் 'வெய்யதோர் காரணம் உண்மை' என்று மிகச் சுருக்கமாய்க் கவிஞன் குறிப்பிடுகிறான்.

இது மட்டுமா? இந்தச் சொற்றொடர், இந்தப் பழைய வரலாற்றுடன் எதிர்காலத்தையும் குறிப்பிடுவதுபோல் அமைந்திருக்கிறது. ராமன் சீதையைப் பிரியும்படியான காரணமும் இங்கே தொனிப்பதாய்க் கருதலாம். ராவணாதி ராட்சஸர்கள் மூலநாசமாகும் காலம் நெருங்கிவருவதால், அந்தக் கொடியதொரு ஊழ்வினையாகிய காரணத்தையும் விதையில் விஞ்ஞானி ஆலமரம் காட்டுவதுபோல் கவிஞன் இங்கேகாட்டுவதாகவும் ஊகஞ் செய்யலாம்.

சுருங்கச் சொன்னால், சீதா ராமர்களின் கஷ்ட காலம், ராவணனுடைய கஷ்ட காலம், சூர்ப்பணகையின் கஷ்ட காலம், அவளுக்குத் துணையாக இருக்கும் கரன் முதலியவர்களின் கஷ்ட காலம்—இப்படியெல்லாம் பல ஜாதகங்களுக்கு ஏற்படப் போகும் அனர்த்த பரம்பரை என்ற சங்கிலித் தொ[illegible]ள இழுத்துக் கொண்டு வருகிறாள் சூர்ப்பணகையம்மாள். . . . . . . ! என்ன கொடுமை!



சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

அரக்கியின் காதல்

238. கொஞ்சமா பைத்தியம்?

ஆசிரமத்திற்கு அருகே ராமனைக் கண்ணுற்றதும் 'ஸாக்ஷாத் மன்மதன் தான் வந்து விட்டானோ?' என்று ஒரு கணம் பிரமித்தான். 'காதற் கடவுளுக்குத் தான் உருவமில்லையே; காதலர்களின் சிந்தையில் தானே தங்குகிறான்' என்று எண்ணியதும், அடுத்த கணமே 'அந்தத் தேவ சௌந்தரியம் ஸாக்ஷாத் தேவராஜாவோ?' என்று மிகவும் அதிசயித்தான். 'அநங்கனுமில்லை, அமரர்கோனுமில்லை; ஸாக்ஷாத் சிவபெருமானோ?' என்று மறுபடியும் வியப்புக் கொண்டான். கடைசியாக, 'சிவனுமில்லை, திருமாலுமில்லை இந்த மன்மத சொரூபம்' என்று முடிவு செய்கிறான்.

புதிய மன்மதன்

இப்படி 'மன்மத மன்மதன்' என்று சொல்லத்தக்க ராமனைக் கடைசியாகப் புத்துயிர் பெற்ற மன்மதன் என்றே எண்ணுகிறான்:

கற்றையஞ் சடையவன்
கண்ணிற் காய்தலால்
இற்றவன், அன்று தொட்(டு)
இன்று காறும்தான்
நற்றவம் இயற்றி, அவ்
அநங்கன், நல்லுருப்
பெற்றனன் ஆம், எனப்
பெயர்த்தும் எண்ணுவான்.

[கற்றை அம் சடையவன் — தொகுதியான, அழகுள்ள, சடையுடைய சிவபிரான். கண்ணிற் காய்தலால — நெற்றிக் கண்ணினால் கோபித்து விழித்ததால். இற்றவன் — அழிந்து போனவன். இன்று காறும் — இன்றளவும். அநங்கன் — அங்கமில்லாதவன். பெயர்த்தும் — மீண்டும்.]

'சிவபெருமானது நெற்றிக் கண்ணால் எரிபட்டு அநங்கனாகி விட்ட மன்மதன் அன்று தொட்டு இன்றுவரை எத்தனையோ நல்ல நல்ல தவங்க

ளைச் செய்து இந்தத் திவ்ய சௌந்தரியம் பெற்றிருக்க வேண்டும்!' என்று கனவு காணத் தொடங்கிய சூர்ப்பணகை, முதல் முதல் அந்த முகமண்டலத்தை நிமிர்ந்து பார்க்கவும் கூசி ராமனது கையழகிலும் தோளழகிலும் மார்பின் அழகிலும் சிந்தையைப் பறிகொடுத்தாள்.

பித்துப் பிடித்தவள் போல்; தன் பார்வையை ஏக காலத்தில் எவ்வளவு தூரம் பரப்பிப் பார்த்தாலும் அங்கெல்லாம் அந்தப் பரந்த மார்பையே பார்ப்பது போலக் கருதினாள் :

'தோளொடு தோள்செலத்
தொடர்ந்து நோக்குறின்,
நீளிய அல்லகண்,
நெடிது மார்(பு)'! என்பாள்.

[செல – செல்ல; அளாவ. நோக்குறின் – நோக்குமிடத்து. நீளிய அல்ல – நீண்டன அல்ல.]

அந்த அழகைப் பார்த்து முடியவில்லை கண்களால்!

தவம் செய்த தவம்

இப்போது துணிந்து அந்த அழகனின் ஒளி வீசும் முகத்தைப் பார்த்து, அவனுடைய தவக்கோலத்தைப் பார்த்ததும் முனிவர்களின் தவவடிவங்களைப் பார்த்துக் கசந்து போயிருந்த உள்ளத்திலும், இனிமையும் ஈடுபாடும் தோன்றிவிடுகின்றன. செல்வங்களுக்கெல்லாம் செல்வமான அழகுச் செல்வத்தை இப்படிப் பெற்றிருக்கும் பேரழகன் ஏன் இந்த அழகு சுமந்த மேனி வருந்தத் தவம் செய்யவேண்டுமோ? 'அது போகட்டும்; இந்த அழகன் தவஞ் செய்வதற்கு அந்தத் தவம் தான் என்ன தவம் செய்திருக்கிறதோ?' என்று அப்படியே பிரமித்துப் போகிறாள் :

'தவம்செயத், தவம்செய்த
தவம்என்?' என்கின்றாள்.

[தவம்செய - ராமன் தவம் செய்யும்படி. தவம் செய்ததவம் - தவம் என்பது செய்த தவம் தான்.]

பூமியின் தவமும் பரவசமும்

இப்படித் தனக்குள் தானே தவம் செய்த தவத்தை வியந்தவளாய், ராமன் நின்று கொண்டிருக்கும் புல்லாந்தரையை நோக்குகிறாள். 'என்ன அழகான, செழித்து வளர்ந்த, பசும்புல்!' என்று அந்தப் புல்லை வியக்கவில்லை. ஆனால், 'இவனுடைய அடிகள் தீண்டும்படியான தவம் செய்ததே!' என்று அந்தத் தரையை வியக்கிறாள். 'இவனுடைய பாதங்கள் பட்ட மாத்திரத்தில் பூமிதேவி, அடைந்திருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தான் என்னென்பது?' என்று எண்ணமிடும் சூர்ப்பணகை, 'பூமிதேவியின் உடல் புளகம் அடைய அந்த ரோமச் சிலிர்ப்பே இந்தத் தழைத்த பசும்புல்!' என்று பரவசமாகிறாள்.

'பூமிதேவியின் இந்தப் பெண்மைதான் என்ன பாக்கியம் செய்திருக்க வேணும்!' என்று வியக்கும் சூர்ப்பணகை,

'அடித்தலம் தீண்டலின்,
அவனிக்(கு) அம்மயிர்
பொடித்தன போலும்இப்
புல்!' என்(று) உன்னுவாள்.

[அவனி—பூமி. பொடித்தன—சிலிர்த்தன. உன்னுவாள்—நினைப்பாள்.]

எப்படி? சூர்ப்பணகைப் பிராட்டியும் கவியாகி விட்டாளா? பைத்தியம் தான் முற்றி வருகிறதா?

அந்த ஜோதியும் இந்த ஜோதியும்

இப்படிப் புல்லாந்தரை மீது பொறாமை கொண்டவன் வானத்திலே ஒளி வீசிச் செல்லும் சூரியனையும் பார்க்கிறான். சூரியனையும் பார்த்து ராமனையும் பார்த்து, 'அந்த ஜோதியும் பொறாமை கொள்ள வேண்டும் இந்தச் சௌந்தரிய ஜோதியை நோக்கி!' என்று நினைக்கிறான். 'ஆனால் வெட்கமில்லாமல் மேலே நடக்கிறான், தன் அற்ப ஒளியைப் பிரமாதமாக எங்கும் விளம்பரப்படுத்திக் கொண்டு!' என்று பழிக்கிறான். 'இந்த ஜோதியை அந்த ஜோதி பார்க்கவில்லையோ, பார்க்கக் கண் இல்லையோ?' என்று பரிதவிக்கிறான்.



'என்ன கண்மூடித்தனம், வெட்கப்பட்டு ஒளிந்து கொள்ளாமல்...' என்றெல்லாம்புலம்பும் பைத்தியத்தைப் பாருங்கள் :—

'வாள்நிலை மருங்குலான்
வயங்கு சோதியைக்
காணல னேகொலோ
கதிரின் நாயகன்?
சேணெலாம் புல்லொளி
செலுத்திச் சிந்தையில்
நாணலன், மீமிசை
நடக்கின் றான்!' என்றாள்.

[வாள் — உடைவாள். நிலை மருங்குலான் — நிலைபெற்ற இடையையுடைய ராமனின். வயங்கு சோதியை—விளங்குகிற சௌந்தரிய ஜோதியை. காணலனே கொலோ?—கண்டிலனே போலும். கதிரின் நாயகன் — ஜோதிகளின் தலைவனான சூரியன். சேணெலாம் — நெடுந்தூரமெல்லாம். புல் ஒளி — அற்ப ஒளி. நாணலன் — நாணமடையாதவனாய். மீமிசை — மிகவும் மேலே.]

பொன்னுடையும் மர ஆடையும்

உடைவாளோடு கூடிய இடுப்பை நோக்கியதும், 'இத்தகைய பேரழகன் பொற் பட்டாடை உடுத்தும் இடுப்பிலே மாவுரி ஆடை கட்டியிருக்கிறானே!' என்ற அதிசயம் ஏற்படுகிறது. 'தவம் செய்த தவம்தான்!' என்ற அதே நினைப்பை மீண்டும் தொடர்ந்தவள் போல், 'பீதாம்பரம் செய்யாத தவத்தை மாவுரி செய்து விட்டது போலும்!' என்கிறாள்:

'வற்கலை நோற்றன;
மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில
போலு மால்!' என்றாள்.

[வற்கலை – மாவுரியாடைகள். மாசிலாமணிப் பொற்கலை – மாசு இல்லாத அழகு வாய்ந்த பொற்பட்டாடைகள். நோற்றில–தவஞ் செய்யவில்லை.]

'இந்த அழகிற்குப் பொன்னுடை வேண்டுமோ? பொன்னாலும் இரத்தினங்களாலும் ஆபரணங்கள் வேண்டுமோ? அழகுக்கு அழகு செய்வதுண்டோ?' என்று இப்படியே மேலும் மேலும் பைத்தியம் பொங்கிக் கொண்டே போகிறது, கடல் பொங்குவதுபோல. ஏன், கடல் வெள்ளம்தான் அரக்கி உள்ளத்தில் பெருகும் ஆசைப் பைத்தியமாகிய வெள்ளத்திற்கு ஈடாகுமா?



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

239. குயிலிசை மயிலியல்

ராமசௌந்தரியத்தில் ஈடுபட்ட ஆசை, கடலைக் காட்டிலும் பெருக, சூர்ப்பணகை — அந்தச் சுடர்மணித் தோள்களை நோக்கியவள் — அப்படியே நிற்கிறாள், அந்தப் பார்வையைப் பறித்து வேறொன்றிலும் செலுத்த முடியாதவளாய். திடீரென்று பார்க்கிறவர்களுக்கு அந்த அரக்கி, பெண் வடிவமான ஒரு பேய்ச் சித்திரம் போலத் தோன்றுகிறாள்.

சித்திரத்தில் சித்திரம்

அந்த ஆகாய வெளியைத் திரைச் சீலையாகக் கொண்டு யாரோ ஒரு சித்திரக்காரன், திகைப்பையும் மனப்புழுக்கத்தையும் ஒரு கோரப் பெண்ணுருவில் தீட்டி வைத்ததுபோலக் காண்கிறாள் சூர்ப்பணகை. ஆசைப் பொருளில் அப்படியே ஊன்றி ஆழ்ந்துபோய், மீண்டுவர ஆற்றல் பெறாத திகைப்பிற்கும் புழுக்கத்திற்கும் திக்பிரமைக்கும் எவ்வளவு பொருத்தமான ஓர் ஓவியம்! மற்ற அம்சங்களையெல்லாம் மறைத்து விட்டு அந்த முக ஓவியத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதற்கு அடியிலே, 'திகைப்பும் தவிப்பும், புழுக்கமும் திக்பிரமையும்' என்ற பெயரை வரைந்து விடலாம். அசைவற்றுச் செயலற்றிருக்கும் இந்நிலையில், இந்த இயற்கைச் சூழலில் இந்த இயற்கைக் கோர ரூபமும் ஓர் அழகோவியம் போலக் காண்கிறது.

இந்தச் சித்திரத்தைப் பின்வரும் கவிச் சித்திரத்திலே கண்டு கொள்வோம்:

வான்தனில் வரைந்ததோர்
மாதர் — ஓவியம்
போன்றனள், புலர்ந்தனள்
புழுங்கு நெஞ்சினள்,
தோன்றல்தன் சுடர்மணித்
தோளில் நாட்டங்கள்
ஊன்றினள், பறிக்கலா
ஊற்றம் பெற்றிலள்!

[வான்தனில் — ஆகாயவெளியில். புலர்ந்தனள் — வாடிப்போனவளாய். நாட்டங்கள் — கண்கள். ஊற்றம் — வலிமை.]

ஒரு பெரிய மலைப் பாம்பைக் காட்டுப் பின்னணியுடன் அதன் கோர விகார ரூபம் தோன்ற ஓவியன் சித்திரித் திருந்தாலும் அதையும், 'என்ன பொருத்தமான, அழகிய ஓவியம்!' என்று வியக்கிறோமல்லமா? அப்படித் தான் இந்தக் கொடிய அரக்கியின் கோரத்திலே காதலால் வாடிப் புழுங் கும் நெஞ்சப பரிதவிப்பைப் பிரதிபலிக்கக் காட்டி,

வான்தனில் மறைந்ததோர்
மாதர் – ஓவியம்

என்று சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

அரக்கியின் ஆலோசனை

ராமன் தோளை உற்று நோக்கியபடியே திக்பிரமை கொண்டு நின்ற சூர்ப்பணகை அந்தச் சௌந்தரிய லகிரியில் தன் நிலையை மறந்து, 'இவனைக் காதலனாக அடையவில்லையானால் என் உயிர் தரியாது; சாவா மருந்தாகிய தேவாமிர்தத்தை உண்டாலும் இனி உயிர் தரித்திராது!' என்று தனக்குள் தானே சொல்லிக்கொள்கிறாள். காதலர்கள், 'காதல் அல்லது சாதல்' என்று முடிவு செய்து கொள்கிறார்களே, அந்த முடிவிற்குத்தான் சூர்ப்பணகையும் வந்து விடுகிறாள். ஆனால், அது இவள் குலத்திற்கே முடிவு காட்டும் முடிவாகி விடுகிறது!

'இனி நாம் துணிந்து அந்த மன்மத சொரூபத்திற்கு எதிரே போய் நிற்கவேண்டியதுதான்' என்று தீர்மானிக்கிறது கோரப் பல்லோடு கூடிய கொடிய சொரூபம். சரி, இந்தக் கோரப்பல் இலங்கப் போனால் காதலன் விரும்புவானா? இவளுக்கு இயற்கைதான் இந்தத் தோற்றம். 'இது அழகா, இல்லையா?' என்று இவள் நினைத்துப் பார்த்ததுமில்லை. இவள் இழந்த கணவனான வித்யுஜ்ஜிஹ்வன் (பெயரே பயமுறுத்துகிறது!) இந்தக் கோரப் பல்லையும், மனிதக் காதலர்கள் பெண்களின் சாதாரணப் பற்களை 'முத்து' என்று புகழ்வதுபோல், புகழ்ந்து பாராட்டியதில்லையா? போகட்டும்; பல்தானா முக்கியம்? தன் மூக்கு அழகாய்த்தானே இருக்கிறது? இந்த ஓர் அழகு போதாதா? மேலும் காதலன் காதலியின் தோற்றத்திலே காண்பதெல்லாம் அழகுதானே, இன்பம்தானே!

இப்படித்தான் ஏதேதோ நினைத்துக் கொண்டு சூர்ப்பணகை தன் ராட்சஸி-வடிவத்திலேயே ராமன் முன் போயிருக்கவேண்டும், வால்மீகி ராமாயணத்திலே. கம்பனுடைய சூர்ப்பணகையோ அந்தப் பழைய சூர்ப்பணகையின் தவற்றைத் தான் செய்ய விரும்பவில்லை. 'அவன் மனிதன்; ராட்சஸ அழகு புரியாது! என் கோரப்பல்லைப் பார்த்ததும் அரக்கி என்று தெரிந்துகொள்வான். ராட்சஸ ருசி தெரியுமா? "ஓஹோ! நரமாமிச பட்சணி; இவள் உறவு வேண்டாம், வேண்டாம்; இந்தத் திருமணம் வேண்டவே வேண்டாம்" என்று வெறுத்து விடுவான், மறுத்து விடுவான்' என்று ஆலோசிக்கிறாள். கம்பனின் சூர்ப்பணகை தன்கோர சொரூபம் அழகானதல்ல, அந்த அழகனை வசீகரிக்கக் கூடியதல்ல என்று தெளிவாகத் தெரிந்து கொள்கிறாள்.

குயிலும் மயிலுமாய்...

இந்த நிலையில் இவள் என்ன செய்யக் கூடும்? எப்படிச் சென்று ராமனுக்கு எதிரே துணிந்து நின்று அவனுடைய காதலைப் பெறுவதற்கு முயலக்கூடும்? 'அழகை அழகால் மயக்க வேண்டும், மான் காட்டி மான்

பிடிப்பது போலே! அதுதான் நல்லது' என்று கருதும் சூர்ப்பணகையின் உள்ளத்தை இதோ கவிஞன் காட்டக் காண்போம்:

'எயிறுடை அரக்கி. எவ் உயிரும் இட்டதோர்
வயிறுடை யாள்,என மறுக்கும்: ஆதலால்,
குயில்தொடர் குதலை.ஓர் கொவ்வைச் செவ்விவாய்
மயில்தொடர் இயலியாய் மருவல் நன்(று)எனு —

[எயிறு — கோரப் பற்கள். தொடர்—ஒத்த. குதலை—மழலைச் சொற்கள். கொவ்வைச் செவ்வி வாய்—கொவ்வைப் பழம் போலச் சிவந்த வாய். இயலி—சாயலுள்ளவள். மருவல் — அருகே செல்லுதல். எனு—என்று எண்ணி.]



தோகை விரித்து ஆடிவரும் மயிலின் சாயலோடு ராமனை நெருங்கிச் செல்லவேண்டும் என்பது மட்டுமல்ல இவள் ஆசை; குயில் கூவுதல் போல் கொஞ்சிப் பேச இனிமையான குரலும் வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். மயிலின் சாயலைக் காட்டிலும் குயிலின் குரலைத்தான் முதன்முதல் விரும்புகிறாள். கோரப் பல்லைக் காட்டிலும் தன் பயங்கர ஒலி பரப்பியான ராட்சஸத் தொண்டை அருவருப்பாயிருக்குமென்று அஞ்சுகிறாள்.

மருந்தா, மந்திரமா?

ஆனால் இந்த விருப்பம் நிறைவேறுவது எப்படி? குயிலின் குரலும், மயிலின் சாயலும் எங்கே கிடைக்கும்? மருந்துக் கடையில் கிடைக்குமா? இந் நாளில் முகப் பவுடர்களும், 'அழகு விக்கிரயசாலை'யில் செய்யப்படும் சிகிச்சை முறைகளும் மயிலின் சாயலை அளித்துவிடும்! ஆனால் தொண்டையில் ரண சிகிச்சை செய்து கொண்டு குயிலிசைவல்லியாக விளங்கும் இரகசியம் இன்னும் நமது நாகரிகத்திற்குப் பிடிபடவில்லை: என் செய்வது?

கவிஞனுடைய சூர்ப்பணகைக்கோ இந்தக் கவலை துளியும் இல்லை. அழகுத் தெய்வத்தை நினைத்து மந்திரம் ஜபிக்கிறாள், அழகியாகிறாள்:

பங்கயச் செல்வியை
மனத்துப் பாவியா,
அங்கையின் ஆயமந்—
திரத்தை ஆய்ந்தனள்,
திங்களிற் சிறந்தொளிர்
முகத்தள், செவ்வியள்,
பொங்கொளி விசும்பினில்
பொலியத் தோன்றினாள்.

[பங்கயச் செல்வி — செந்தாமரை மலரில் அழகுச் செல்வமாகத் திகழும் லட்சுமி. பாவியா — பாவித்து; பாவனை செய்து; மனோ பாவத்துடன் நினைத்து. அங்கை — அகங்கை. ஆய — ஆகிய. அங்கையின் ஆய — கைவசப்பட்டிருக்கும். ஆய்ந்தனள் — (இங்கே) உரு விட்டு ஜபித்தவளாய். திங்களின்—சந்திரனைக் காட்டிலும்.. செவ்வியள்: — புதுமையான அழகு வாய்ந்தவள். பொங்கு ஒளி — தன் மேனியிலிருந்து பொங்கிவரும் ஒளி. விசும்பினில் — ஆகாய வெளியில்.]

லட்சுமி — மந்திரத்தை ஜபிக்கிறாள். அந்த அழகுத் தெய்வத்தின் அருளால் அழகிய மானுடப் பெண் வடிவம் தரித்துக் கொள்கிறாள். மனசுக்குப் பிடித்த அழகான 'ஸாரி' தரித்துக் கொள்வதுபோலத் தான்!

ஆகாயத்தில் மின்னொளி பாய்வதுபோல் மேனி ஒளி பாய ராமனை நோக்கி வருகிறாள். இப்போது சூர்ப்பணகையா வருகிறாள்? இல்லை, நீருவாட்டி குயிலிசை - மயிலியல் - கொவ்வைச் செவ்விவாய் - திங்களிற் சிறந்தொளிர் பொங்கொளி வல்லியாள்!



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

240. தேன்மொழி, மான்விழியாள்

கோதாவரியின் அன்புக் குரலும் சோகக் குரலுமான வரவேற்பு-ஆரவாரங்களுக்கிடையே, இயற்கையின் அழகுவளங்களை அனுபவித்துக் கொண்டே, ராமன் சீதையின் உருவ அழகுகளில் ஈடுபட்டதையும், சீதை ராமனின் வீர லட்சணங்களில் ஈடுபட்டதையும் கண்டோம். பஞ்சவடியில் இரக்கமிலா அரக்கி இயற்கை யழகுகளுக்கிடையே ராமனுடைய ரூப சம்பத்தைக்கண்டு ஏங்கிப் போவதைக் காண்கிறோம்.

பிரியாத காதலர்களுக் கிடையே பிரிவு செய்யத் தோன்றிய இந்தக் கபட நாடகத்தை எடுத்துக் காட்ட அந்தக் 'காதலர்-காட்சி'யை முன் கூட்டியே அமைத்திருக்கும் காவியத் திறன் இனிது புலனாகிறதல்லவா?

* * * *

அந்தக் காடு தளிர்களும் இலைகளுமாய் ஒரே பசுஞ்சுடர்க் கடலாய்ப் பொலிகின்றது. பொய்கைகள் செந்தாமரைக் காடுகளாய்க் காண்கின்றன. ஒருபுறம் தோகை விரித்தாடும் மயில்கள். ஒருபுறம் நடை யழகு காட்டுவது போல் உலாவித் திரியும் அன்னங்கள். அதோ அந்தக் காட்டுக் கொடிகளுக்குத்தான் என்ன தளதளப்பு! ஆனந்தமான இந்த இயற்கைக் காட்சியை இருவர் நோக்குகிறார்கள். ஒருவன் ஆனந்தமாக மெய்ம்மறந்து நோக்குகிறான். ஒருத்தி சபலமாகச் 'சுரண்டும்' கருத்துடன் பார்க்கிறாள்.

ராமனுக்கு எதிரே சிறிது தூரத்தில் திடீரென்று உதயமாகிறது ஒரு ஜோதி—ஒரு சுந்தரப் பெண் வடிவம்.

வஞ்சியா, வஞ்சமா?

செந்தாமரை மலர்கள் அந்தச் சிறிய அடிகளுக்குத் தங்கள் செம்மையையும் ஒளியையும் திறை கொடுத்துப் பணிசெய்து கிடக்கின்றன. அந்த அடிகளின் மென்மைக்குத் தோற்றுத் தளிர்கள் வருந்துகின்றன. ஆடும் மயில்களிடம் சாயலைக் கவர்ந்து கொண்டாள். உலாவும் அன்னங்

களிடம் நடையைக் கடன் வாங்கினன். மலர் சுமந்த கொடிகளின் செழிப்பையும் தளதளப்பையும் அப்படியே கொள்ளை கொண்டாள்.

ராமனுடைய நடையழகில் மோகித்துப்போன சீதை, மிதிலையில் கன்னிப்பெண்ணாக இருந்த காலத்தில்,

நடந்தது கிடந்ததென்
உள்ளம் நண்ணியே !

என்று அதிசயித்தாள். இப்போது நடந்து வரும் இச் சுந்தரியின் நடை அப்படியே இக்கவிதையில் கிடக்கிறது :

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர்
பல்லவம் அனுங்கச்,
செஞ்செவிய கஞ்சநிமிர்
சீறடிய ளாகி,
அஞ்சொலிள மஞ்ஞையென,
அன்னமென, மின்னும்
வஞ்சியென, நஞ்சமென,
வஞ்சமகள் வந்தாள்.

[பஞ்சி - செம்பஞ்சு. ஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் - ஒளிமிக்க குளிர்ந்த தளிர்கள். அனுங்க - வருந்த. செம்செவிய கஞ்சம் நிமிர் - சிவந்த அழகுள்ள தாமரை மலர்போல் (நடக்கும்போது) நிமிர்கின்ற. சீறடி - சிறு அடிகள். அஞ்சொல் இள மஞ்ஞையென - அழகிய சொல்லையும் பெற்றுள்ள இளமையான மயில்போல. வஞ்சி - காட்டுக் கொடி. நஞ்சம் - விஷம்; (இங்கே) விஷமுள்ள பாம்பு.]

அழகுக் கொள்ளை

நடை மட்டுமா கிடக்கிறது கவிதையில்? இடையிலே கிடக்கும் மேகலாபரணம், காலில் கிடக்கும் சிலம்புகள் — இவற்றின் சப்த ஜாலங்களும் ஜொலிப்புகளும் இங்கே ஒலிப்பதிவும் ஒளிப்பதிவும் செய்யப்பெற்றன போலக் கிடந்து நம் காதில் வந்து மோதுகின்றன. பாட்டைப் பாடிப் பாருங்கள்; மானஸீகமாய்க் கேட்டுப் பாருங்கள்.

ஆடிவருவது போல வருகிறாள். பாடி வரவில்லை; உரையாடியும் வரவில்லை. எனினும் அந்த வசீகர உதடுகளில் கிடக்கிறது அழகிய பேச்சின் சாயை! ஆஹா, அந்த வாய் திறந்து ஒரு வார்த்தை பேசினாலும் போதுமே: அம் மோகினியின் பேச்சு எவ்வளவு மோகனமா யிருக்கும்! பேச்சு இப்படியென்றால், எண்ணம் — நெஞ்சம் — எவ்வளவு மோகனமா யிருக்குமோ?

தள தளவென்று மின்னிக் கொண்டிருக்கும் காட்டுக் கொடியைச் சுற்றி அதன் நிறத்தோடு அபேதமாகிக் கொடியோடு கொடியாய்க் கிடக்கும் பாம்பைக் குறித்துக் கேட்டிருக்கிறீர்களல்லவா? அது போன்ற கொடிய விஷ சர்ப்பம் அந்தப் பெண்கொடியின் நெஞ்சு! அந்த 'அகத்தின் அழகு' இந்த முக அழகினூடே காணக் கிடக்கிறது :

வஞ்சியென, நஞ்சமென,
வஞ்சமகள் வந்தாள்.

வஞ்சமே உருக் கொண்ட மகள், அழகே உருவெடுத்த மகளாக வருகிறாள்.

நாலு பக்கமும் ஜில்லென்று அபூர்வ அழகும் ஒளியும் சிந்த, ஜல் ஜல் என்று நடந்து, 'வாய் முத்தம் சிந்திவிடுமோ? வடிவழகே!' என்று பிரமிக்

கும்படி, ராமனை நோக்கி வந்து கொண்டிருக்கிறான், காட்டுச் செடி கொடிகளுக்கிடையே. நாமும் அந்தக் காட்டில் எங்கேயோ மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது.

மயூரவல்லியா ?

நாமும்தான் மயிலைப் பார்த்திருக்கிறோம்; அது தோகை விரித்தாடுவதையும் பார்த்திருக்கிறோம். அந்தத் தோகைமயிலின் சாயலை வெளியிடுவது போல், பன்னிற மலர்கள் சூடிய கூந்தலழகும், ஜரிகைச் சேலையின் முன்தானையும் வீச்சும், காதணியும் மூக்கணியும் இரத்தின மாலைகளும் இவள் அங்கத்தின் குழைவு நெளிவுகளை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இந்த மோகன மயிலை வேறு எங்கேதான் பார்க்க முடியும்? காட்டில் நடக்கிறாளா? மண்ணில் கால் தோயாது வானில் நடக்கிறாளா?



வானின்உயர் கற்பகம்
 உயிர்த்த கதிர்வல்லி
மேனிநனி பெற்று;விளை
 காமநிறை வாசத்
தேனின்மொழி உற்றினிய
 செவ்விநனி பெற்(று) ஓர்
மானின்விழி பெற்று,மயில்
 வந்ததென வந்தாள்.

[உயிர்த்த — பெற்ற. கதிர் வல்லி-பிரகாசமுள்ள பூங்கொடி. உற்று — அடைந்து. இனிய செவ்வி — கண்ணுக்கினிய அழகை. நனிபெற்று — நன்றாகவும் மிகுதியாகவும் பெற்று.]

மாந்தளிர் மேனி என்கிறார்கள், சாதாரண அழகியின் நிறத்தை வருணிக்கும் போது. அந்த மாந்தளிர் நிறத்தைத்தான் வார்த்தைகளால் வருணிக்க முடியுமா? அந்த மாந்தளிர்தான் இந்தச் சொப்பன லோகத்தின் சாயைக்கும் சாயலுக்கும் பொருந்துமா? மாந்தளிரை மனசில் வைத்துக் கொண்டு வானுலகத்துக் கற்பகத் தருவிலே படர்

திருக்கும் பூங்கொடியின் அந்தப் பொன் மயமான இளந் தளிரைக் கற்பனை செய்து பாருங்கள். ‘அந்த நிறம், அந்த ஒளி, அந்த மென்மை, அந்த வசீகரம் எல்லாம் சேர்ந்தது இந்தப் பெண்மை யழகு!’ என்று பிரமிக்கிறான் கவிஞன். இந்த வசீகரமான பிரமிப்பு நமது உள்ளத்திலும் துள்ளி வருகிறது.

அந்த இதழ்களோ, — பேசிப் பார்க்க வேண்டும் என்று தூண்டிய அந்தச் செவ்விதழ்கள் தான் — இப்போது பார்க்கப் பார்க்கக் காமவெறி யூட்டுகின்றன. அந்தத் தேன் மொழிதான் எவ்வளவு தித்திப்பையும் வெறியையும் ஊட்டக்கூடும்! இந்த ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பினாலும் மருண்டு மருண்டு பார்க்கும் அந்த மான்விழியைத் தட்ப முடியுமா? தப்பிப் பிழைக்க முடியுமா? அப்படிப் பலவேறு பாவங்களும் அமையப் பெற்ற பார்வையுடன் வருகிறது, மனமோகன மயில் வடிவம்.

இந்த இரண்டு கவிகளையும் பாடிப்பாடிப் பாவசமாகும் போது சூர்ப்பணகை தன் புதிய ஜகன்மோகன சொரூபத்தில் உல்லாசமாக நடந்து போவதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். அந்த இன்ப வடிவமும் இனிய சாயலும் நமக்கு அருகே சென்று கொண்டிருப்பது போல் ஓர் உணர்ச்சி, ஒரு பிரமிப்பு எற்படுகிறது.

பாலகாண்டத்திலே சீதாதேவி சபாமண்டபத்திற்கு வந்து சேரும் போது அந்த நடையழகையும் தோற்றத்தையும் வருணிக்கும் பாடல்களின் கதியும் சந்தமும் தான், இந்த ஆரணிய காண்டத்திலே சூர்ப்பணகை ராமனிடம் வந்து சேரும் அழகை வருணிக்கவும் உதவுகின்றன. மெய்யழகிற்கும் பொய்யழகிற்கும் ஒரே சந்தம்!

‘தாமரைக் குளத்தில் அன்னம் நீந்தி வரும் உணர்ச்சியையும், இன்பப் படகு வலிக்கப்பட்டுவரும் ஒய்யாரத்தையும் அது நினைவுக்குக் கொண்டு வருவதால், (அந்தச் சந்தத்தையே) கம்பன் இங்கும் கையாளுகிறான். சூர்ப்பணகையை அரங்கத்தில் தோற்றுவிக்கும் (இந்த) அழகைத்தான் என்னென்று சொல்லலாம்! வால்மீகியில் சூர்ப்பணகையின் வரவு சாமானியமாகத்தான் வருணிக்கப் பட்டிருக்கிறது’ என்கிறார் ஆராய்ச்சிப் பேரறிஞர் வ. வே. சு. ஐயர்.